Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12150)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி-28 | 12-07-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-144

## விடுதலைப்புலிகள்-படையினரின் வாகனங்களில் கண்காணிப்புக் குழுவின் பிரசன்னத்துடன் பயணம்!

### - பாதுகாப்பான பயணத்திற்கு அரச தரப்பு சிபார்சு

(கொழும்பு)

அரசாங்க பிரதேசத்தின் ஊடாக மாதம் ஒன்றுக்கு ஒரு சுற்றுப் பயணங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் கிளிநொச்சியில் இருந்து மட்டக்களப்பிற்கும், கிளிநொச்சியில் இருந்து திருகோணமலைக்கும் மேற்கொள்ள முடியும். இதன் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் வாகனத்திலும் படையினரின் வாகனத்திலும், போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் பிரசன்னமாகி இருக்க வேண்டும் எனவும் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுத்தலைவருக்கும் அரச சமாதான செயலகப் பணிப்பாளருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதியூடாக இராணுவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இலும் திருமலையிலும் துக்கம் அனுஷ்டிப்பு!

திருகோணமலை உப்புவெளிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். குடாநாட்டிலும் திருமலையிலும் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டின் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் என துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ். பல்கலைக்கழகம் உட்பட சகல கல்வி நிறுவனங்கள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், வீதிகள், சந்திகள்தோறும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு சோக கீதங்கள் இசைக்க விடப்பட்டிருந்தன.

இதைவிட வாகனங்களில் எல்

(12ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகள் மீதான தாக்குதல்

# அப்பட்டமான போர்நிறுத்த மீறல்!

## பொறுமை காப்பது சாத்தியமற்றது என புலிகள் கண்காணிப்புக்குழுவிற்குக் கடிதம்

(கிளிநொச்சி)

**திருமலையில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அப்பட்டமான போர் நிறுத்த மீறலாகும் . எமது போராளிகளும், மக்களும் தொடர்ந்தும் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் கொல்லப்படுவதையும், காயப்படுத்தப்படுவதையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவதையும் நாமோ, எமது மக்களோ தொடர்ந்தும் பார்த்துக்கொண்டு பொறுமைகாப்பது சாத்தியமற்றது.**

இவ்வாறு நேற்று முன் தினம்திருமலை உப்புவெளிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் தங்கியிருந்த இடத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு நேற்று எழுதியுள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.சி.ஆர்.சி யினால் வித்துடல்கள் சம்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டன

(திருகோணமலை)

திருமலை-உப்புவெளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை படுகொலை செய்யப்பட்ட நால்வரில் மூன்று பேரின் வித்துடல்கள் நேற்று மாலை 6.30 மணியளவில் திருகோணமலை முற்றவெளியில் வைத்து செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவினரால் பொறுப்பேற்கப்பட்டு தரைமார்க்கமாக மூதூரில் உள்ள சம்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சம்பூரில் விடுதலைப்புலிகளிடம் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் இவ்வித்துடல்களை கையளிப்பர் என்று செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் திருகோணமலை தலைமை அதிகாரி பட்டிக்வால்டர் தெரிவித்தார். செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் மூன்று வாகனங்களில் இவ்வித்துடல்கள் எடுத்துச்செல்லப்பட்டன. செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## லிங்கநகரில் கைக்குண்டுவீச்சு; இராணுவச்சிப்பாய் படுகாயம்

(திருமலை)

திருமலை மாவட்ட லிங்கநகர் பகுதியிலிருந்து! மட்கோ பகுதி நோக்கிச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வீதிச்சோதனைச்சாவடி மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சில் இராணுவச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் சமன் குமார என்ற சிப்பாயே படுகாயமடைந்துள்ளார்.

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக முஸ்லிம் கட்சிகள் வழக்கு?

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு எதிராக முஸ்லிம் கட்சிகள் வழக்குத் தொடர முடிவுசெய்துள்ளன. ஆழிப்பேரலை நிவாரண சபையினூடாக முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி முஸ்லிம் அரசியல் கட்சிகள் சில உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தொடர தயாராவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வித்துடல்களுடன் சென்ற மக்களை விரட்டியடிக்க பொலிசார் முயற்சி

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் வித்துடல்களுடன் ஊர்வலமாக வந்தமக்களை கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி கலைத்து குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான முயற்சியில் நேற்று சிறிலங்காப் பொலிசார் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் நடந்த தாக்குதல் சம்பவத்தின்போது வீரச்சாவடைந்த போராளிகளது வித்துடல்கள் திருகோணமலை மக்களால் கும்பிறுபிட்டியில் இருந்து ஏகாம்பரம் வீதியூடாக ஊர்வலமாக எடுத்து வந்து நகரை அண்மித்த வேளை அப்பகுதியில் வைத்து ஊர்வலமாக வந்த மக்களை கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி குழப்பம் விளைவிக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா பொலிசார் ஈடுபட முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து ஊர்வலமாக வந்தோர் நகரின் ஊடாகச் செல்லாது வேறு வழியூடாகச் சென்று திருகோணமலை முற்றவெளி பொது மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து வித்துடல்களுடன் சென்ற மக்கள் திருகோணமலை அரசியல் செயலகத்தை அடைந்தனர்.

இம்மாவீரர்களின் வித்துடல்கள் இன்று சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்திற்கு எடுத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தமிழர் மீது அரசு போரை திணித்துள்ளமையை திருமலை தாக்குதல் வெளிக்காட்டுகின்றது

### யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருமலை செல்வநாயகபுரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது இராணுவத் தினர் தாக்குதல் தொடுத்துள்ளமையானது மீண்டும் ஒரு போரை தமிழ் மக்கள் மீது வலிந்து திணித்துள்ளமையை வெளிக்காட்டு கின்றது என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக் குள் உள்ள விடுதலைப்புலிகள் அலுவலகத்தில் புத்துப் பேரடங்கிய குழுவினர் ஏ.கே ரக துப்பாக்கி மற்றும் குண்டுகளுடன் வந்து தாக்குதல் மேற்கொண்டமையானது இராணுவத் தினர்தான் இத் தாக்குதலை மேற்கொண்டனர் என்பதை புலனாக்குகின்றது.

திருகோணமலை நகர் பூராகவும் இராணுவ மயப்படுத்தப்பட்டு வீதி தோறும் காவலரண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளுக்கு பாதுகாப்பு வழங்காவிட்டால் படையினரின் உணவு, குடிநீர் விநியோகம் தடுக்கப்படும்

### -வடமராட்சி க.தொ.சமாசம் எச்சரிக்கை

(வடமராட்சி)

அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள படையினரின் உணவு மற்றும் குடிநீர் விநியோகங்களை தடைசெய்யப்போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தின் பொது முகாமையாளர் சூரியகுமார் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடாபாக அவர் மேலும் தெரிவித்ததாவது: திருகோணமலையில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட தாக்குதலானது இராணுவத்தினரின் வழிகாட்டல் இன்றி நடந்திருக்க வாய்ப்பில்லை.

எனவே அரசாங்கம் இந்தச் சம்பவத்துக்கு பொறுப்புக் கூறியே ஆகவேண்டும்.

அரசாங்கம் சமாதான வழியிலா அல்லது போரின் மூலமா பிரச்சினையை தீர்க்கப்போகி

(12ஆம் பக்கம் பார்க்க)

MEDECINS DU MONDE

## Project Co-ordinator

**To support preparatory tasks and implementation of the programme (Rehabilitation of Mallavi Hospital)**

**Skills:**

1. Drafting, support planning and formulation of the project proposals and budget. Preparation of work plans, timeframes and site planning.
2. monitoring programme activities and ensure the timely submission
3. Preparation of estimates for new works. Preparation of tender documents and evaluation of tenders.
4. Management of the construction process, participate in purchasing of raw materials, labour rates, equipment, stock management.
5. Project management: implementation of the programme and follow up the activities.
6. Communication and negotiating with Government Departments to ensure the smooth flow of operations.

**Knowledge:**

1. 5 years minimum experience in management of Building Construction
2. Ability to write and speak in English and Tamil essential.
3. Good communicator with strong personality.
4. Willingness to live in the Vanni.
5. Good computer knowledge would be an asset.

If you are interested, please come on monday morning 18th of july in our office in Mallavi, Mallavi Team.

(5980)


# வடபிராந்திய போ.சபைக்கு உறுதியளித்த 30 பேருந்துகளை இதுவரை வழங்கவில்லை

## - மக்களுக்கான சேவையை வழங்குவதில் நெருக்கடி -

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு இலங்கை போக்குவரத்து சபையால் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட 30 பயணிகள் பேருந்துகள் இதுவரை வழங்கப்பட வில்லை என வடபிராந்திய போக்கு வரத்து சபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடமே எமக்குத் தருவதாக உறுதிதரப்பட்டும் கூட இன்று வரை பேருந்துகள் எமக்குத் தரப்பட வில்லை என்றும் யாழ். குடா நாட்டில் பயணிகள் பேருந்து பற்றாக்குறை நிலவிவரும் சூழலில் பொதுமக்களிடம் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு பேருந்து சேவையை நீடிக்கக் கோரி மகஜர்கள், கோரிக்கைகள் வந்து கொண்டு இருப்பதாகவும், உறுதியளித்த 30 பேருந்துகள் கிடைக்கும் எனின் மக்களின் வேண்டுகோள் ஓரளவேனும் நிவர்த்தி செய்யப்படும் என்றும் அவ் அதிகாரி தெரிவித்தார். (28)

# அம்பலவன் பொக்கணையில் படகுதிருத்தும் நிலையம் திறப்பு

(முல்லைத்தீவு)

அம்பலவன் பொக்கணையில் படகு திருத்தும் நிலையம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நன்மைகருதி திறந்து வைக்கப்பட்டது.

போரூட் நிறுவனமும் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிறுவனமும் இணைந்து ஆழிப்பேரலையினால் பாதிப்படைந்த மீனவரின் படகுகளை இலவசமாக மறுசீரமைத்துக் கொடுக்கும் நிலையத்தை கடந்த 04ஆம் திகதி ஆரம்பித்துள்ளனர்.

ஏற்கனவே முல்லைத்தீவு சிலாவத்தையிலுள்ள நிலையத்தில் இத் திட்டத்தின் கீழ் வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் படகுகள் இலவசமாகத் திருத்திக் கொடுக்கும் சேவை நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

இத்திட்டத்தின் முதற் கட்ட நிறைவில் கடந்தமாதம் 23ஆம் திகதி திருத்தியமைக்கபட்ட 45 வெளியிணைப்பு இயந்திரங்கள் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20)






MEDECINS DU MONDE

## Advertisement for Contractors or Teams of workers for the construction of two buildings in Mallavi Hospital

Actually working on the rehabilitation of Mallavi Hospital, MDM, French Non Governmental Organization, is looking for motivated and qualified workers (like contractors or team of massons, labors, carpenters, electricians and plombers---) to build one men's ward and one emergency ward.

The construction shall begin around the 1st of August.

We need 6 massons, 6 carpenters with their labours, 3 electricians snd 3 plombers.

If you are interested, please come and meet us on Saturday morning 8. 30, the 16th of july in our office in Mallavi,

Regards,
MDM Team.

(6401)



## தவறவிடப்பட்டது

முல்லைத்தீவு வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளராகிய எனது நடுத்தரப் பிரயாணப் பை கடந்த வெள்ளிக்கிழமை 08.07.2005 பகல்11 மணியளவில் பரந்தன் சந்திக்கும், கரடிப்போக்கு சந்திக்குமிடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் அருகிலுள்ள காவல் நிலையத்திலோ அல்லது பரந்தன் எரிபொருள் நிலையத்திலோ அல்லது கிளிநொச்சி வீதி அபிவிருத்திக் திணைக்கள அலுவலகத்திலோ ஒப்படைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:-
வே.சிவனடியார்.

(6186)


## திகதி நீடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உலர் உணவு பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்குரிய கேள்விக்கான விண்ணப்பத் திகதி 17.07.2005 காலை 10.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளதென கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (சோ)

## அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டியுள்ளார். (சோ)


## சடலத்தை பெற்றுக்கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இல 311 உதய நகரில் வசிக்கும் R. அன்னலட்சுமி (வயது 71) என்பவரை கடந்த மாதம் 19 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாக P. கண்ணன் என்பவரினால் கொண்டு வரப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் 20 ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டு அதன் பின் கடந்த ஒன்பதாம் திகதி அங்கிருந்து கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு நேற்று முன்தினம் காலை 11.30 மணிக்கு இறந்துவிட்டார்.

அவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே உரித்துடையவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (கு.தீ)


## நீங்காத நினைவலைகள்



**வேலாயுதம் சுரேஸ்**
குணம்/சோ
கரவெட்டி மத்தி, யாழ்.

சோ-அண்ணனே ........


ஆண்டுகள் எட்டாக இருக்கலாம் எம்மைப் பிரிந்து. ஆனால் எங்களுடன் பழகிய நாடகளை எங்களால் மறக்க முடியவில்லை. எங்களை வளர்த்து ஆளாக்கிய நீங்கள் எங்களுடன் இல்லை என்று நினைக்கும்போது எமக்கு எல்லோருக்கும் கண்ணீர் தான் வருகின்றது.......... உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் பிரிவை**
**நம்பமுடியாத**
**நண்பர்கள்**

(6350)



## வீர வணக்கம்



**டிக்கான்/றேமன்**

திருகோணமலை எதிரியின் தாக்குதலின்போது
வீரச்சாவு 10.07.2005

அன்புத் தம்பி டிக்கானே
காலிழந்தும் கடலிலே
கந்தகப் பொதி சுமந்து
செல்லும் வெற்றித் திருமகனே
விடுதலைக்காய் நீ வந்த போதுதானே
உன்மீது நாம் பாசம்
கொண்டோம் திருமலையின்
வெற்றித் திருமகனாய் விடுதலையின்
உணர்வலையாய் நீ மூச்சாக நின்றாயோ
எங்கும், எப்போதும், எதிலும் உன்னை
எதிரி நெருக்க முடியவில்லையே
நேற்று மட்டும் எப்படி? நம்பமுடியவில்லையே
உன செய்தி கேட்டு விம்பி அழுகின்றோமே தம்பி
நீ வருவாய் என நாம் பார்த்திருந்தோம்
அனால் விதையாகி விட்டாயோ

என்றும் உன்பாசம் மறவாத
அக்கா சுபா,குடும்பத்தினர்.
கிளிநொச்சி.

(6351)

# தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தவில்லை

## லண்டன் நகர் குண்டுவெடிப்பு குறித்து புதிய தகவல்

(லண்டன்)

**லண்டன் குண்டுவெடிப்பில் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தவில்லை என்பது உறுதியாகியிருக்கிறது. தொலைவில் இருந்தபடியே குண்டுகளை வெடிக்கச் செய்யும் கருவிகள் மூலமே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

இத் தாக்குதலைத் தற்கொலைப் படைத் தீவிரவாதி ஒருவர் நடத்தியதாக கருதப்பட்டது. வேறு ஒரு இடத்தில் குண்டு வைப்பதற்காக தீவிரவாதி மாடி பஸ்சில் வெடிகுண்டை எடுத்துச் சென்ற போது அது தவறுதலாக முன் கூட்டியே வெடித்துவிட்டதாகவும் கருதப்பட்டது.

இந்த நிலையில் தடயவியல் அதிகாரிகள் தற்போது தீவிர ஆய்வு நடத்தி லண்டன் குண்டுவெடிப்பில் தற்கொலைப்படை தாக்குதல் எதுவும் நடக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். தாக்குதல் நடந்த பகுதிகளில் எல்லாம் தீவிரவாதிகள் வெடிகுண்டுப் பொதிகளை விட்டு விட்டு சென்றிருக்கின்றனர். பின்னர் தொலைவில் இருந்தபடி கருவி மூலம் குண்டுகளை வெடிக்கச் செய்திருக்கின்றார்கள்.

இதற்கு முன் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மாட்ரிட்டில் இதுபோல ரயில் குண்டுவெடிப்புக்கள் நடந்தன. அதில் 191 பேர் பலியானார்கள். அந்தத் தாக்குதலில் குண்டுகளை வெடிக்கச் செய்வதற்காக தீவிரவாதிகள் செல்லிடத்தொலைபேசிகளைப் பயன்படுத்தினார்கள். ஆனால் லண்டன் குண்டுவெடிப்பில் செல்லிடத்தொலைபேசியை பயன்படுத்தினால் ஒருவேளை தாக்குதல் திட்டம் நிறைவேறாமல் போகலாம் என்ற பயத்தில் தீவிரவாதிகள் டைமர் கருவி மூலம் குண்டு வெடிப்புக்களை நடத்தியிருப்பது தெரிய வந்திருக்கிறது.



இங்கிலாந்து ராணி இரண்டாவது எலிசபெத் நேற்று முன்தினம் லண்டனில் உள்ள ரோயல் மருத்துவ மனைக்குச் சென்று குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு ஆர்வமுடன் சிகிச்சை அளித்த மருத்துவமனை ஊழியர்களுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்தார்.

## இந்தோனேஷியாவில் படகு விபத்து

இந்தோனேஷியாவின் பப்புவ மாகாணத்தில் இடம்பெற்ற படகு விபத்தின் காரணமாக சுமார் 100 பேர் வரை நீரில் மூழ்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னர் ஜகார்த்தாவின் கிழக்கே 3750 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கொந்தளிப்பான கடற் பகுதியில் இந்தோனேஷியப் படகொன்று கவிழ்ந்ததிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தில் இதுவரை 15 பேரைக் காப்பாற்றியிருப்பதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். படகில் சுமார் 100 பேர் வரை இருந்ததாக நேரில் கண்டவர்கள் கூறியுள்ளார்கள்.

## லண்டன் நகர் மீதான தொடர் குண்டு வெடிப்பு மொரோக்கோ நாட்டவருக்கு தொடர்புண்டாம்

லண்டனில் பேருந்து-ரயிலை தகர்த்து பலரைக் கொன்ற தீவிரவாதத் தலைவரை உயிரோடு பிடிக்க ஐரோப்பிய நாடுகளில் பொலிசார் வலைவீசி தேடிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் குண்டு வைத்த தீவிரவாதி பொலிஸார் உஷாரானதும் லண்டனிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். அவர் மொரோக்கோ நாட்டில் 20ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அதிலிருந்து தப்பி இங்கிலாந்தில் வசித்து வந்த முகமது அல்-ஜெர்போசி (வயது-45) என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரைப் பிடிக்க மொரோக்கோ பொலிசார் முயன்ற போதும் இங்கிலாந்தில் தஞ்சமடைந்ததால் அவரை தங்களிடம் ஒப்படைக்குமாறு மொரோக்கோ அரசு கோரியது. ஆனால் இரு நாடுகளுக்குமிடையில் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் இல்லாததால் முகமதுவை மொரோக்கோ நாட்டிடம் ஒப்படைக்க இங்கிலாந்து அரசு மறுத்துவிட்டது.

இவருக்கு சகபிளான்ஸ் குண்டு வெடிப்பு வழக்கில் மொரோக்கோ இஸ்லாமிய நீதிமன்று 20 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது. ஆனால் அவர் தண்டனையை அனுபவிக்காமல் இங்கிலாந்தில் இருந்தார். ஸ்பெயின் நாட்டில் 191 பேர் பலியான குண்டு வெடிப்புக்கு காரணமான மொரோக்கோ நாட்டை சேர்ந்த 31 வயதான ஜமால் சவுகம் என்பவருக்கும் இவருக்கும் தொடர்புண்டுஎனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஐரோப்பா முழுவதுமே இவரை பிடிப்பதற்கு பொலிசார் வலைவீசி வருகின்றனர். வெடி குண்டு வைக்க ஆட்களை தயார் செய்வது, அவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவது போன்றவற்றில் முகமது கில்லாடியாம்.

## சூடானின் நீண்ட யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர போராளிக்குழுக்களுடன் அரசு உடன்பாடு

இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்ட சூடானின் நீண்ட யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரும் முயற்சியாக உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் தென்சூடானின் போராளிகளின் தலைவரான ஜோன்கராங், நாட்டினுடைய முதல் பிரதி சனாதிபதியாக பதவி ஏற்றிருக்கிறார்.

ஓகஸ்ட் மாதம் சூடானில் ஸ்தாபிக்கப்படும் பல்கட்சி அரசாங்கத்திலே, அவர் சனாதிபதி ஓமார் அல் பஷீரின், பிரதி சனாதிபதியாக பதவி வகிக்கவுள்ளார்.

அதேவேளை தெற்கு சூடானுக்கு கூடிய சுயாட்சியை வழங்குகின்ற புதிய அரசியல் யாப்பும் நேற்று முன்தினம் கைச்சாத்தாகியிருக்கின்றது.

இதன் மூலம் எதிர்வரும் ஆறு ஆண்டு காலங்களுக்கு தெற்கு சூடானின் இடைக் கால அரசாங்கத்திற்கு போராளிகளின் தலைவர் ஜோன்கராங் தலைமை வகிப்பார்.

ஆறு வருடங்களுக்குப் பின்னர், தென் சூடானுக்கு தனிநாட்டு அந்தஸ்து வழங்குவதா என்பது மக்கள் வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்படும்.

### புளோரிடாவை சேதப்படுத்திய டெனிஸ் சூறாவளி

டெனிஸ் சூறாவளி அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாநிலத்தை சேதப்படுத்தியுள்ளது. இச்சூறாவளி பலத்த சத்தத்துடன் மிகவும் கடுமையாக வீசியதனால் அங்குள்ள வீடுகள் யாவும் உடைந்துள்ளதுடன் மரங்கள் யாவும் முறிந்து வீடுகளின் மேல் வீழ்ந்துள்ளன. பிரதான வீதிகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தற்பொழுது புளோரிடா நோக்கி நகரும் சூறாவளி அலபாமா, மொரோம் நகர்களை அடையும் போது அதன் வேகம் மணிக்கு 80 மைல் வேகமாகக் குறையுமென தெரிவிக்கப்படுகின்றது.

## லண்டன் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய மூவர் கைது

லண்டனில் இடம்பெற்ற தொடர்குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மூன்று பேரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அந்நாட்டுப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்தத் தொடர் குண்டுத்தாக்குதல்கள் குறித்து பொதும்க்களின் உதவியை பிரித்தானிய பொலிசார் நாடுகின்றனர்.


இச்சம்பவத்தில் 50 பேர் கொல்லப்பட்டதுடன் 700 பேர் வரை காயமடைந்தனர். காணாமல் போனவர்கள் அல்லது உயிரிழந்தவர்கள் எனக் கருதப்படுபவர்களை கண்டுபிடிப்பதற்கும் பகுப்பாய்வுக்கான சாட்சியங்களை பெறுவதற்கும் மக்களின் வாக்குமூலங்கள் பெரிதும் உதவுமென பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

## குண்டுத் தாக்குதல் எதிரொலி லண்டனில் மசூதிகள் மீது தாக்குதல்

(லண்டன்)

இங்கிலாந்து தலைநகரம் லண்டனில் நடந்த குண்டுத்தாக்குதலின் எதிரொலியாக அங்குள்ள மசூதிகள் குருத்வாராக்கள் மீது தாக்குதல் தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் லீட்ஸ் பகுதியில் உள்ள மசூதி தீ வைப்புக்கு உள்ளானது. இங்கிலாந்து மக்கள் சீக்கியர்களையும் முஸ்லிம்கள் என்று தவறாக கருதுவதால் கெண்ட் பகுதியில் உள்ள ஒரு சீக்கிய குருத்வாராவுக்கும் நேற்று முன்தினம் தீவைக்கப்பட்டது. இங்கிலாந்தில் இந்தியர், பாகிஸ்தானியர் மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் கறுப்பின மக்கள் ஆகியோர் சிறுபான்மையினர் ஆவார்கள். இந்த சிறுபான்மையினர்மீது குண்டுவெடிப்புக்கு பின் 70 தாக்குதல்கள் நடந்துள்ளன. இந்த இனரீதியான மோதல் இங்கிலாந்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த பதற்றத்தை தணிப்பது பற்றி இங்கிலாந்து அரசின் நெருக்கடி சமாளிப்பு உயர்மட்டக்குழுவினர் கூடி ஆராய்ந்து வருகிறார்கள். இதற்கிடையே இங்கிலாந்தில் உள்ள மசூதிகளில் நேற்றுமுன்தினம் வழக்கம் போல வெள்ளிக்கிழமை தொழுகை நடந்தது. அதில் லண்டன் குண்டுவெடிப்புக்காக விசுவாசிகள் யாரும் வெட்கப்படத் தேவையில்லை அவரவர்கள் அன்றாட வேலைகளை வழக்கம் போல பாருங்கள் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.



பெல்ஜியம் நாட்டில் நடந்த மணற்சிற்பக் கலை விழாவில் இது ஒரு காட்சி

## காணித் தகராறு காரணமாக சீனாவில் 7 பேர் பலி; 40 பேர் காயம்

சீனாவின் வடபகுதியிலுள்ள மாகாணமொன்றில் காணித் தகராறு காரணமாக இடம்பெற்ற மோதலில் தொடர்புடைய 100 இற்கும் மேற்பட்டவர்களை சீனப்பொலிசார் கைது செய்துள்ளனர். இவ் அனர்த்தத்தின் காரணமாக ஏழு பேர் உயிரிழந்தும் 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் சீனச்செய்திப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1949 ஆம் ஆண்டு முதல் ஆட்சியிலிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியினர் எதிர்நோக்கும் எதிர்ப்புக்களில் இறுதியாக இடம் பெற்ற வன்முறை இதுவாகும். இப்பகுதியில் சுமார் 58 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வன்முறைகள் இடம் பெற்றுள்ளதாகவும் இவற்றில் அநேகமானவை காணி சம்பந்தமாகவே இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஒப்பந்தகாரர்களே இத்தாக்குதலுக்கு பின்னணிக் காரணமாக இருப்பதாகவும் சீனப்பத்திரிகைச் செய்தி தெரிவித்துள்ளது.

## தற்போதைய காலநிலை மாற்றம் விண்கலத்தின் நடவடிக்கையை பாதிக்காது

*–நாஸா அறிவிப்பு*

டெனிஸ் சூறாவளியின் தாக்கம் "சற்றில் டிஸ்கவரி" விண் கலத்தின் ஆரம்ப நடவடிக்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்தாது என நாஸா தெரிவித்துள்ளது.

நாஸா ஆய்வு மையம் நாளை சற்றில் டிஸ்கவரி எனும் விண்கலத்தை விண்ணில் செலுத்தவுள்ளது. இவ் விண்கலம் செம்மையான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக நாஸா ஆய்வுகூடப் பணிப்பாளர் கூறியுள்ளார். இதேவேளை ஏழுபேர் அடங்கிய ஆய்வாளர் குழு புளோரிடாவிலுள்ள கெனடி விண்வெளி ஆய்வு கூடத்தை சென்றடைந்துள்ளது. விண்கலத்தை விண்ணில் ஏவுவதற்கு புளோரிடா, கலிபோர்னியா, மெக்சிக்கோ ஆகிய பகுதிகளில் தெளிவான வானம் காணப்பட வேண்டுமென நாஸா தெரிவித்துள்ளதோடு தற்போதைய காலநிலை ஒரு அச்சுறுத்தல் அல்ல எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதில் அதில் பயணித்த ஆய்வாளர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிர்கிஸ்தானின் புதிய சனாதிபதியாக பதில் சனாதிபதி தெரிவானார்

கிர்கிஸ்தானில் புதிய சனாதிபதியாக பதில் சனாதிபதி குர்மாம்பூல்பாக்கீர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் பதில் சனாதிபதி அமோக வெற்றியீட்டியுள்ளதாக அந்நாட்டின் மத்திய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. எனினும் இவருக்கு எத்தனை விகித வாக்குகள் கிடைத்துள்ளதென்பது இன்னமும் அறியக்கிடைக்கவில்லையென்று தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது. இந்த எண்ணிக்கை கிடைத்த பின்னர் மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தானின் புதிய சனாதிபதி இவர் என உறுதி செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

முன்னைய சனாதிபதி மார்ச் மாதம் இடம் பெற்ற புரட்சியின் காரணமாக பதவி கவிழ்க்கப்பட்டதையடுத்து புதிய சனாதிபதிக்கான தேர்தல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி வழங்கக் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

**உருத்திரபுரம் மத்திய மருந்தகம் மகப்பேற்று மருத்துவமனைக்கு நோயாளர் காவு வண்டியினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.**

உருத்திரபுரம் மத்திய மருந்தக மண்டபத்தில் நேற்று முன்தினம் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் கோபாலப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் வைத்து சங்க உறுப்பினர்களால் மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

கடந்த இருமாதங்களுக்கு முன்பாக நடைபெற்ற வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு நிகழ்வில் கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் கிளி. மாவட்டத்திற்கென புதிய நோயாளர் காவு வண்டிகளை சுகாதார அமைச்சு அனுப்பி வைக்கும் பட்சத்தில் உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு ஒரு நோயாளர் காவு வண்டி கையளிக்கப்படும் என தெரிவித்ததனை நினைவுபடுத்திய அங்கத்தவர்கள் தற்போது புதிய நோயாளர் காவு வண்டிகள் கிளி. மாவட்டத்திற்கு வந்து சேர்ந்துள்ளதெனவும் இவற்றுள் ஒரு நோயாளர் காவு வண்டியினை உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு பெற்றுக் கொள்ள உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளும் வண்ணம் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் சங்கத் தலைவரை வேண்டியுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து பத்து கிலோ மீற்றருக்கப்பால் மேற்படி வைத்தியசாலை அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் பொருட்காட்சி

(பூநகரி)

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளினதும் பொருட்காட்சி அகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன் பாடசாலை மட்டத்தில் நடாத்தி விடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. சகல மாணவர்களும் பங்கு பற்றக் கூடிய வகையில் பொருட்காட்சி அமைய வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யும் ஒவ்வொரு வகுப்புக்களிலும் பாட ரீதியாக ஐந்து மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர் இவை கோட்ட மட்ட பொருட் காட்சிக்கு அனுப்பப்படும்.

வலய மட்டப் போட்டிக்கு பாடவாரியாக வகுப்பு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஆக்கங்களில் பூநகரி, கண்டாவளைக் கோட்டங்களிலிருந்து மூன்று தெரிவுகளும் கரைச்சி கோட்டத்தில் இருந்து ஐந்து தெரிவுகளும் பங்கு பற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (34)

# பசீலன் வீதி முச்சந்தி மதகை சீர்படுத்தக் கோரல்

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகத்தின் ஆளுமைக்குட்பட்ட முள்ளியவளை பசீலன் வீதியின் முச்சந்தி மதகு முற்றாக உடைந்த நிலையில் உள்ளது.

மேற்படி சந்தியில் இரு பக்க மதகுக் கட்டுகளும் முற்றாக உடைந்து மழை வெள்ளம் மதகருகே அரித்து அறுத்தோடியாகவுள்ளதால் அவ்விடத்தில் சிறு சிறு விபத்து ஏற்பட்டுள்ளதுடன் வாகனங்கள் தடம் புரண்டு போகும் என்ற அச்சத்துடனேயே வாகன சாரதிகள் செயற்படவேண்டியுள்ளது.

இதே வேளையில் அண்மை நாட்களில் க.பொ.த உயர்தர பரீட்சைக்குச் சென்ற மாணவர் ஒருவர் அவ்விடத்தில் வீழ்ந்துகாயமடைந்த நிலையில் பரீட்சைக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# செத்தல் மிளகாய் விலை வீழ்ச்சி பூநகரி விவசாயிகள் கவலை!

(பூநகரி)

பூநகரியில் செத்தல்மிளகாயின் விலை குறைவடைந்துள்ளமையினால் மிளகாய்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் ஒரு கிலோ செத்தல் மிளகாய் 70 முதல் 75 வரையான விலைகளிலே விவசாயிகளிடம் கொள்வனவு செய்கின்றனர்.

வேலையாட்களின் கூலிநாளொன்றுக்கு 350 ரூபாவாகும். இதனால் எதிர் வரும் போகங்களில் மிளகாய்ச் செய்கை பாதிக்கக்கூடும் ஏது நிலை காணப்படுகின்றது.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு நியாயமான விலையைத் தீர்மானிக்க வேண்டுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (34)

## ஆனி உத்தர விஞ்ஞாபனம்

(அலுவலகசெய்தியாளர்)

சக்திபுரம் உருத்திரபுரம் எள்ளுக்காடு சிறி முத்துமாரி அம்மன் ஆலய ஆனி உத்தர விஞ்ஞாபனம் நாளை நடைபெறவுள்ளது.

நாளை பகல் அபிஷேக ஆராதனை நடைபெற்று அதனைத்தொடர்ந்து விசேட சொற்பொழிவுகள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாப்பா மோட்டை கடற்கரை வீதி செப்பனிடப்பட்டு நிர்மாணம்!

மன்னார் மாவட்டத்திலுள்ள பாப்பாமோட்டைக் கிராமத்தில் கடற்கரைக்குச் செல்ல புதிய வீதியொன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இக் கிராமத்திலிருந்து கடற்கரைக்கு வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் காணப்பட்ட இவ் வீதியால் மீனவர்கள் குறிப்பிட்ட தூரத்திற்குக் கால் நடையாகச் சென்று தமது தொழிலை பெரும் சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொண்டு வந்தனர். இதனைக் கருத்திற் கொண்டு முதற் கட்டமாகச் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் பாப்பாமோட்டை கிராமத்திலிருந்து கடற்கரை வரையான 3.5 கிலோ மீற்றர் தூர நீளத்திற்கு இவ் வீதி மண்ணடிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டு புதியதொரு வீதியாக மாற்றமடைந்து காணப்படுகின்றது.

தொடர்ந்து இரண்டாம் கட்டமாக ஒரு பாலம் உட்பட இரண்டு கிலோ மீற்றர் நீளமான தூரம் வரை கிரவல் இடப்பட்டு முழுமையாக அமைக்கப்பட்டுள்ளது.மீதியாக உள்ள 1.5 கிலோ மீற்றர் வீதியொன்றும் பாலமொன்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதிப் பங்களிப்புடன் மூன்றாம் கட்ட வேலையாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

தற்போது மீன் கொள்வனவு செய்வதற்காக வாகனங்களும், மீனவர்களும் மிகச்சுலபமாக இவ் வீதியால் போக்குவரத்தை மேற்கொண்டு தங்கள் தொழிலை மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வன்னிமாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவின் அரையாண்டு சேவை

(அலுவலக செய்தியாளர்)

வன்னிமாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினரால் 2005 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை பல்வேறு வகையான வேலைத் திட்டங்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/ மத்திய கல்லூரி, கிளி/ முரசுமோட்டை மகாவித்தியாலயம், கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த 200இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டன.

மேலும் படைப்பிரிவினரால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த வணிக நிறுவன பிரதிநிதிகள், அரசசார்பற்ற பிரதிநிதிகள், ஆயப்பகுதிப் பிரதிநிதிகள், கிளி மாவட்ட தொழில் நுட்பக்கல்வி மாணவர்கள், உணவகப் பணியாளர்கள், தனியார் கணக்கியல் கல்லூரி மாணவர்கள், வெண்புறா, நீடோ, யுனிசெப் நிறுவனங்களால் ஒழுங்கமைக்கப்பட்ட பணியாளர்கள், மாணவர்கள் என 750 ற்கு மேற்பட்டவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி நெறிகள் படைப்பிரிவினரால் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மல்லாவி, புளியங்குளம், உயிலங்குளம், முல்லைத்தீவு எனப்பல இடங்களிலும் நடாத்தப்பெற்றன.

மற்றும் வணிக நிறுவனங்கள், உணவகங்கள் நலன் பேணல் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் நலன் பேணல் அலுவலர் காலாண்டுப் பயிற்சிநெறி ஒன்றை ஆரம்பித்து நடைமுறைப் படுத்தி வருகின்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைந்து முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனை, முள்ளியவளை பகுதியில் 100ற்கு மேற்பட்டவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி நெறிகள் நடாத்தப்பெற்றது.

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித் திட்டங்களிலும், சேவைத் திட்டங்களிலும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு படைப்பிரிவின் கொழும்பு தலைமையகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற உடைகள், பால்மா போன்ற அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பெற்றது.

(கு.தீ)

# மின்சார சபைக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மின்சார வழங்கலில் தடைகள் ஏற்பட்டு வருவதை ஆட்சேபித்து மின்சார சபைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட வுள்ளது. இதற்கான முயற்சிகளை மன்னார் மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அமைப்பு மேற்கொண்டுள்ளது.

அமைப்பின் இணைப்பாளர் மங்கள காதர் இது தொடர்பில் கருத்துரைக்கையில் மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதத்தில் மாத்திரம் சுமார் 20 தடவைகளாக மின்சாரத் தடை ஏற்பட்டது. இதன் காரணமாக பெரும்பாலான மக்களின் வீட்டு மின்சார உபகரணங்கள் பழுதடைந்து பாரிய நஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன.

இது அடிப்படை உரிமை மீறல் சம்பவமாகும். எனவே இதனை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவுள்ளதாக தெரிவித்தார்.

# தற்காலிக கூடாரங்கள் வழங்கல்

(திருமலை)

பன்குளம் பொருளாதார அபிவிருத்திக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க பன்குளம் பிரதேசத்தில் யுத்தத்தினாலும், கடற்கோளினாலும் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்காலிகக் குடியிருப்புக் [illegible]ங்களை வழங்கியுள்ளது.

[illegible]வ நகர் கிராமத்தைச் [illegible]0 குடும்பங்களுக்கும் பன்குளம் கிராமத்தைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கும் முதலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த பதினைந்து குடும்பங்களுக்கும் கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக் குடும்பங்களில் நான்கு சிங்களக் குடும்பங்களும் இரண்டு முஸ்லிம் குடும்பங்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. பன்குளம் பொருளாதார அபிவிருத்திக் கழகத்தின் பொதுச் செயலாளர் ஆர். ஜெரோம் இத் தகவலைத் தெரிவித்தார். (25)

# மணல் அகழ்வை மட்டுப்படுத்தி விநியோகிக்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் சட்ட விரோத மண் அகழ்வு செய்வதற்கு எதிராக கனிப் பொருள் அகழ்வு திணைக்களத்தினால் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஐந்து இடங்களில் மட்டும் மண் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்,ஒவ்வொரு இடத்திலும், மாதம் 2 ஆயிரத்து 110கியூப் மண் மட்டுமே அகழ்வு செய்யமுடியுமென்றும் தெரிவிக்கப்படுன்றது.

இப் பகுதியில் எடுக்கப்படும் மண் பன்னங்கோட்டை பரிகரிகண்டல் ஆகிய இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு பின்னர் அங்கிருந்து விநியோகத்திற்கு எடுக்கப்படும் எனவும் நானாட்டான் பிரதேச செயலாளர் ந.திருஞானசம்பந்தன் தெரிவித்துள்ளார். (18)

## கண்டெடுப்பு

வஸ்தியாம்பிள்ளை - திருச்செல்வம் 3ஆம் குறுக்குத்தெரு நாவாந்துறை வண்ணார்ப் பண்ணை என்பவரின் தேசிய அடையாள அட்டை (521944013V) கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (15)

# மந்திகை இராணுவ முகாம் புனரமைப்பு
# வடமராட்சி மக்கள் விசனம்

(வடமராட்சி)

**வடமராட்சி மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் பருத்தித்துறை சாவகச்சேரி வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாமை மீளப் புனரமைக்கும் பணியில் இராணுவத்தினர் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனையடுத்து வடமராட்சி மக்கள் விசனமடைந்துள்ளனர்.**

இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதி தனியாருக்குச் சொந்தமான வீடும் விவசாய நிலமும் ஆகும். இவ்வாறு பொது மக்களின் நிலப் பரப்பை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இம் முகாமை மீளப் புனரமைத்து காவலரண்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் இராணுவ முகாமில் முன்னர் சாதாரண நிலத்தோடுடனான காவலரண்களே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது தூண்கள் இடப்பட்டு பறன் முறையிலான காவலரண்களை முகாமைச் சுற்றி அமைத்து வருகின்றனர்.

தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையின் படி தனியார் கட்டடங்கள் வளாகங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டிய நிலை உள்ளது. ஆனால் உடன்படிக்கைக்கு முரணான வகையில் இராணுவ முகாமை தனியார் வளாகத்தில் மீள் புனரமைப்புச் செய்வது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (கா)

## கிராம அபிவிருத்தி ஆராய்...
## யாழ்.குடாநாட்டில் ஒருவர் கூ...

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கிராம அபிவிருத்தி ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் இதுவரை காலமும் நியமிக்கப்படாமையால் குடாநாட்டின் விவசாய நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லையென யாழ். விவசாயத் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் உள்ள 435 கிராம அலுவலர் பிரிவுகளில் 435 கிராம அபிவிருத்தி ... உத்தியோகத்தர்கள் நியமிக... வேண்டும் என்றும் ஆனால் ஒ... உத்தியோகத்தர் கூட இதுவரை காலமும் குடாநாட்டில் நியமிக்கப்படவில்லை என்றும் ஆனால் இதற்கு எதிர் மாறாக தென்னிலங்கையில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (28)

## சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு வாள்வெட்டில் முடிந்தது

(தென்மராட்சி)

குடம்மியன் பகுதியில் அண்ணன் தம்பி இருவர் இடையே ஏற்பட்ட குடும்பத் தகராறு இறுதியில் வாள்வெட்டில் போய் முடிவடைந்துள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் நடந்த இச் சம்பவத்தில் அருட்செல்வம் (வயது-30,) குகனேசன் (வயது -18) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி நகர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (28)

## மீனவருக்கு நட்ட ஈடு வழங்கவில்லை
## தென்மராட்சி மீனவர் சங்கம் குற்றச்சாட்டு

(தென்மராட்சி)

தென்மராட்சி குடாகடல் பகுதியில் போருக்கு முன்னரும் பின்னரும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கு ஏற்பட்ட தொழில் நட்டம், பொருட் சேதம், உயிர் சேதம் எவற்றிற்கும் அரசாங்கம் வழங்குவதாக உறுதியளித்த நட்ட ஈடுகள் எதனையும் இதுவரை காலமும் தமக்கு வழங்காது ஏமாற்று நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு இருப்பதாக கச்சாய் லீசோரியார் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பகிரங்கக் குற்றச்சாட்டை விடுத்துள்ளது.

தொடர்ந்தும் இப் பிரதேசத்தில் மீன்பிடி தொழில் மேற்கொள்வது என்பது நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் படையினரின் பல்வேறு நெருக்கடிக்குள் தொழில் செய்ய முடியாத அவல நிலைக்குள் இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது(28)

## தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்
## 253 வீடுகளைக் கட்ட யு.என்.எச்.சி.ஆர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 253 வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) முன்வந்துள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் காரணமாக வீடுகளை இழந்த அல்லது வீடுகள் சேதமான நிலையில் உள்ளவர்களுக்கே இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் இளவாலை வடக்குக் கிராமத்தில் 34 வீடுகளும் பன்னாலைக் கிராமத்தில் 34 வீடகளும் கட்டுவன்கிராமத்தில் 17 வீடகளும் குருவளையில் 68 வீடுகளும் மல்லாகம் வடக்கு கோணப்புலவு கிராமத்தில் 78 வீடுகளும் ஊறணியில் 23 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களது நலனைக் கவனத்தில் கொண்டு இந்த வீடுகளை அமைத்துக் கொடுக்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) நடவடிக்கை எடுத்துள்ளதாக தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளீதரன் கூறினார். (33)

## சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் அமைக்கப்பட்ட தடைமுகாமை அகற்ற கோரிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள கண்ணாடிப்பிட்டி மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா படையினரின் தடைமுகாமையின் நகர்த்தி மயான செயற்பாடுகளை மக்கள் சுதந்திரமாக மேற்கொள்ள நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென நகர அபிவிருத்திக் குழு கோரிக்கைவிடுத்துள்ளது. படையினர் அமைத்துள்ள இத்தடைமுகாமினால் மயானத்திற்கு செல்லும் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குவதுடன் மக்களின் சுதந்திரமான செயற்பாடுகளும் முடக்கப்பட்டிருப்பதாக நகர அபிவிருத்திக் குழு தெரிவித்துள்ளது. (28)

## கைதடி கிழக்குப் பகுதி கிராமத்திற்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

கைதடி கிழக்குப் பகுதியில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களான, ராசபுரி, நவபுரம் ஆகிய கிராமங்களிற்கு மின்இணைப்பை வழங்கும்படி இக்கிராம மக்கள் பல்வேறு தரப்புக்களிடம், கோரிக்கை விடுத்துள்ளனர்.

அடிப்படை வசதிகளில் மிகவும் பின்தங்கியுள்ள இக் கிராமங்கள் முன்னேற வேண்டுமெனில் தங்களது அயல் கிராமங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புக்களை தங்களது கிராமங்களுக்கும் நீடிப்புச் செய்ய சம்பந்தப்பட்டோர் நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்றும் இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## வடமராட்சியில் மிதிவெடி அகற்றும் பிரிவினரின் விபரங்களை சேகரிக்கும் இராணுவம்

### - மீட்புப் பணியாளர் அச்சம்

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதியில் 1995ஆம் ஆண்டுகாலப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலப்பரப்புக்களில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ரெனிஸ் மிதி வெடியகற்றும் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் விபரங்களை இராணுவத்தினர் திரட்டிவருகின்றனர்.

ரெனிஸ் மிதி வெடியகற்றும் பிரிவினர் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவில் சுற்றுப் பகுதியில் உள்ள வயல் வெளிகளில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள கண்ணி வெடிகளை கடந்தஇரண்டு வார காலமாக அகற்றும்பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இப் பணியில் ஈடுபட்டுள்ளோரின் பெயர் விபரங்களையும் கிராம சேவகர் பிரிவையும் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த சனிக்கிழமை பெற்றுச்சென்றுள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த செயல் தம்மை அச்சுறுத்தும் விதமாக அமைந்துள்ளது என மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.(கா)

## கோப்பாய் கல்விக் கல்லூரியில் இந்து மாமன்ற மாநாடு

அகில இலங்கை இந்து மாமன்றமும், யாழ்ப்பாணம் தேசிய கல்விற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் மாநாடு எதிர் வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை கோப்பாய் யாழ். தேசிய கல்வியற் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றம் பொன் விழாவினையொட்டி நடத்தப்படும் இந்து மாநாடு குறித்த விபரங்களை கிளி. மாவட்ட செயலகத்தினரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரியில் இரவு நேரக்களவுகளை தடுக்க மீண்டும் விழிப்புக் குழுக்கள்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில்அதிகரித்து வரும் இரவு நேரக் களவுகளைத்தடுக்க மீண்டும் விழிப்புக் குழுக்களை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன.

நகரத்தில் இரவில் படையினர், மற்றும் பொலிசார் காவலுக்கு இருந்தும் கூட பல இடங்களில் கடை உடைப்பு களவுகள் அதிகரித்து வருவதாகவும் சமூக விரோதிகள் சிலர் அரச படையினரின் ஆதரவுடன் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகச் சந்தேகங்கள் வலுத்துள்ளதால் இரவு நேரக் களவுகளைத் தடுக்க மீண்டும் விழிப்புக் குழுக்கள் நகரத்தில் அமைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## தண்ணீர் தாங்கி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நீர் விநியோக நடவடிக்கைகளுக்கென 'நீரப்' திட்டத்தின் கீழ் தண்ணீர் தாங்கி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இவ் "பவுசர்" மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலிவடக்கு பிரதேச சபை செயலாளர் எஸ். மாணிக்கம் கூறினார். (33)

## சமூக விரோதச் செயலில் ஈடுபடுவோருக்கு எல்லாளன் படை எச்சரிக்கை


(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் படையினரின் கைக்கூலிகளாகவும் அடி வருடிகளாகவும் இருந்து தொடர்ந்து செயற்படுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கையினை எடுக்க உள்ளதாக தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்கள் எல்லாளன் படை என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்டுள்ளது, மற்றும் படையினருடன் உறவைப் பேணுவோர், உளவு சொல்வோர், படையினர் வழங்கும் ஆபாச இறுவெட்டுக்களை இளைஞர்களுக்கு விநியோகிப்போர், இராணுவத்தின அப்பக் கடைகளில் காலம் கழிப்போர், பெண்களை படையினருக்குத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்போர், மற்றும் படையினரின் துணையுடன் களவு, வீடுகள் உடைப்பு, கால் நடைகள், மண் கடத்தலில் ஈடுபடுவோர் கசிப்பு காய்ச்சுவோர் போன்ற சமூக விரோத செயலில் ஈடுபட்டுள்ள சமூக விரோதிகள் இனங்காணப்பட்டு சம்பந்தப்பட்ட இடங்களிலேயே தமது படை தண்டனை வழங்கும் என்றும் இத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# அயோத்தி தாக்குதல் இருநாடுகளின் உறவை பாதிக்கும்?

இந்தியா- பாகிஸ்தான் இடையே சந்திருக்கும் அமைதிக் காற்று மீண்டும் புயலாகுமோ ... எனும் சந்தேகத்தையே அயோத்தி தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை எனலாம். அயோத்தியில் தாக்குதல் நடத்தியவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதக் கூட்டமே என்று இந்தியா திட்டவட்டமாக நம்புகின்றது.

ஏற்கனவே இந்தியா - பாகிஸ்தான் இடையே நீறு பூத்த நெருப்பாகவே தான் உறவு நீடிக்கின்றது. சாம்பல் ஊதப்படும் போதுநெருப்பு பரவுவது என்பது சாதாரண விடயமே எனவே தற்போதைய அயோத்தி தாக்குதல் நெருப்பை கொஞ்சம் கிளறி



விட்டிருக்கின்றது என்பதில் சந்தேகமெது வுமில்லை.

இந்தியாவும்- பாகிஸ்தானும் பயங் கரவாதத்தை ஒடுக்குவதில் உறுதி பூண்டுடிருப்பதாக இரு நாட்டு தலைவர்களும் கூட்டறிக்கை வெளியிட்டமை உலகறிந்த விடயம்.

கூட்டறிக்கைக்கு முரணாக பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஒடுக்கவோ களையவோ முன்வரவில்லை என்பதும் தற்போது இந்தியத் தரப்பு குற்றச்சாட்டு. அத்துடன் பாகிஸ்தானில் தீவிரவாத அமைப்புகள் மிகவும் கட்டுக்கோப்பாக இயங்குவதாகவும் அதனை பாகிஸ்தான் ஆதரிப்பதாகவுமே இந்தியா மேலும் குற்றச்சாட்டை நீட்டி இருக்கிறது. இல்லையேல் அயோத்தி தாக்குதல் எப்படி ஏற்பட்டிருக்க முடியும் என்று வினா வேறு எழுப்பி இருக்கின்றது.

இதேவேளை இதுவரையும் பாகிஸ்தான் வாய் பூட்டு பூட்டிக் கொண்டிருக்கிதே தவிர எதையும் கூறவுமில்லை மறுப்பு தெரிவிக்கவுமில்லை என்பது பலரது கவனத்தையும் திருப்பாமலில்லை பாகிஸ் தானின் மௌனம் எதற்கு எடுத்துக்காட்டு ? மௌனம் சம்மதம் என்பதாய் தமது நாட்டு தீவிரவாதிகளே தாக்குதல் நடத்திய தாகவா.........? இல்லையேல் வீணாக விழுந்த கறையினை எப்படி துடைப்பது எனும் அச்சமா....... எதுவானாலும் பாகிஸ்தான் பேசியேதான் தீரவேண்டும்.

இல்லையேல் இந்தியத் தரப்பு குற்றச்சாட்டு உண்மை என்றாகிவிடும். இதேவேளை ஜி-8 மாநாட்டில் கலந்துகொள்ள ஸ்கொட்லாந்த் சென்றுள்ள இந்தியப்பிரதமர் அங்கு செய்தியாளர்களிடம் பாகிஸ்தான் தீவிரவாதிகளே அயோத்தியில் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இது இருநாட்டு உறவுகளை பாதிக்கும் என்றும் எச்சரிக்கை செய்தி வெளியிட்டுள்ளமை ஏதோ ஒன்றை கோடிட்டுக் காட்டத் தவறவில்லை எனலாம் அதாவது பாகிஸ் தான் மீதான சந்தேக விதையினை உலக நாடுகளிடையே பிரதமர் தூவியுள்ளார் என்றுதான் கூற வேண்டியுள்ளது.

எனவே பாகிஸ்தானின் மௌன விரதம் நல்லதல்ல என்பதுடன் பயனளிக்க கூடிய ஒன்றல்ல என்றே தான் எண்ணத் தோன்றுகின்றது.

உத்தரப்பிரதேசம் பைசாபாத் மாவட்டத் திலேயே அயோத்தி அமைந்துள்ளது. இங்கிருந்த பாபர் மசூதியை கடந்த 1992 டிசம்பர் ஆறாம் திகதி அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த எல். கே. அத்வானி தலைமையிலான கரசேவகர்கள் மண்மேடாக்கிப் போட்டனர்.

அதுமட்டுமன்றி பாபர் மசூதியிருந்த இடத்தில் இராமர் பிரானே இருந்தாக இராமர் கோயிலையும் கட்டும் பணிகளைத் தொடங்கினர்.

இந்தியாவில் அயோத்தியில் பாபர் மசூதியா..... இராமர் கோயிலா....... எனும் சர்ச்சை நீண்டது. மதக்கலவரங்களை ஏற்படுத்தியது. இந்துக்களும், முஸ்லிம்களும் அடித்து கொண்டனர்:உயிரோடு எரிக்கப் பட்டனர். மனிதம் என்பது புதைக்கப்பட்டது. இந்துவா........ முஸ்லிமா ...... எனும் இரத்த ஆறே பாய்ந்தது.

இறுதியில் மத்தியரசு சர்ச்சைக்குரிய பகுதியை தானே பொறுப்பேற்றுக்கொண்டது. இந்து, முஸ்லிம் ஒற்றுமை ஏற்படும் எனவும் யாராவது ஒருவர் விட்டுக்கொடுக்கும் போது அயோத்தியில் மசூதியோ... இராமர் கோயிலோ.... கட்டப்படும(?) எனும் நம்பிக்கையுடன் இன்றுவரை சிக்கல் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றது.

அயோத்தி பாபர் மசூதி இடிப்பு தொடர்பான வழக்குக் கூட இன்றும் நிலுவையில் ரெபரேலி நீதிமன்றில் தொடர்கதையாக இருப்பதும் நிலைக் கின்றது.

அடிக்கடி விஸ்வ ஹிந்து பரிசட்டும் கரசேவகர்களும் அயோத்தியில் இராமர் கோயில் கட்டியே தீருவது என்று வீறாப் புடன் எழுவார்கள் .... பரபரப்பை ஏற்படுத்துவார்கள் ..... மத்தியரசின் எச்சரிக் கையினை தொடர்ந்து பொசுக்கென்று அடங்கிப்போவார்கள்.

இதேபோல் முஸ்லிம் வாரியமும் அயோத்தியில் பாபர் மசூதியே கட்டப்பட வேண்டுமென்று போர்கொடி தூக்குவார்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாக காரசாரமாக அறிக்கை வெளியிடுவார்கள் அவ்வளவுதான் அத்துடன் அந்தப் பரபரப்பு ஓய்ந்து விடுவதுமே வழமை.

இந்த நிலையில்தான் கடந்த செவ் வாய்க்கிழமை சர்ச்சைக்குரிய அயோத்தியில்



ஆறு தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். சர்ச்சைக்குரிய அயோத்தியிலிருந்து 70 மீற்றர் தூரத்தில் பாதுகாப்பு அரணை பாதுகாப்பு படையினர் அமைத்திருந்ததனால் தான் விபரீதங்கள் பெரியளவில் தடுக்கப்பட்டதென்னமோ உண்மைதான் !.

இல்லையேல் அயோத்தியிலுள்ள சர்ச்சைக்குரிய வளாகத்திற்குள் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக்கூடும்.... ..... விளைவுகள் விபரீதமாகக்கூட இருந்திருக்க முடியும்.....

தற்போதைய சூழலில் ஆறு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர். என்பதோடு பிரச்சினை முடிந்து விட்டது எனலாம். ஆனால் பாதுகாப்பு படையினரின் அசமந்த நிலையே தீவிரவாதத் தாக்குதல் என்று தேசிய ஜனநாயக கூட்டணி சிக்கலை முடிவுறவிடாமல் தொடங்கியுள்ளது.

அதுமட்டுமன்றி உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டுமென்றும் கோஷமிடு கின்றனர்.

நாடு தழுவிய ரீதியில் போராட்டமும் நடத்தி முடித்திருக்கின்றன. ஏற்கனவே பாகிஸ்தானுடன் அதிக விட்டுக் கொடுப் புக்களை மேற்கொண்டுள்ளதாக பாரதிய ஜனதா குற்றச்சாட்டுகளை முன்னெடுத் திருக்கின்றது.

இந்த நிலையில் அயோத்தியின் தாக்குதலையும் அரசியலாக்கி இலாபம் தேட



முற்படுவதாக பிரதமர் மன்மோகன்சிங் குறைபட்டுக் கொண்டுள்ளார்.

இதனை மெய்யாக்கும் விதத்தில் பாரதிய ஜனதா கூட்டணியும் நாடு தழுவிய போராட்டங்களை நடத்தியிருக்கின்றது எனலாம். இல்லையேல் அயோத்தி தாக்குதலுக்கு அனுதாபப்படாமல் ஆர்ப் பாட்டம் செய்ய பாரதிய ஜனதா முற்படுவது சரியான அணுகு முறையா என்றே விமர்சனம்



எழுந்திருக்கின்றது.

இதேவேளை எல்.கே அத்வானி பாகிஸ்தான் சென்ற வேளை அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு தனது வாழ்வில் துக்க கரமான நாள் என்று கூறியிருந்தமை யாவரும் அறிந்ததே.

இதனால் பாரதிய ஜனதா கூட்டணிக்குள் பிளவுகள், சர்ச்சைகள் சிக்கல்கள் உருவான மையும் தெரியாத புதியனவல்ல.

ஆனால் பாகிஸ்தானில் நீலிக் கண்ணீர் வடித்த அத்வானி இன்று நாடு தழுவிய போராட்டத்தையும் இந்துக்கள் அவமதிக்கப் பட்டுவிட்டதாக கோஷம் போடுவதும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

அத்துடன் மீண்டும் அயோத்தியை அரசியலாக்க முற்படுவதாகவே தோன்று கின்றது. அரசியலில் மதமும் இரண்டறக் கலந்து விட்ட நிலையினை இந்த சம்பவங்கள் வெளிக் காட்டத் தவறவில்லை.

இதேவேளை பாரதிய ஜனதா ஆட்சியில் தான் பாகிஸ்தான் தீவிரவாதி களால் பாராளுமன்றம் தாக்கப்பட்டது அதே போல் காஷ்மீர் சட்ட சபையினுள் கூட தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியுள் ளனர்.

இதன் போது கூட எல்.கே அத்வானி உள்துறை அமைச்சராக இருந்தார். அப்படியெனில் அப்போது மட்டும் பாதுகாப்பு துறையில் அசட்டை ஏற்படவில்லையா... ஏன் அத்வானி தனது பதவியை இராஜினாமா செய்ய முன் வரவில்லை..... என்று ஆளும் கட்சி வினா எழுப்பி இருக்கின்றது.

எனவே இரு அவைகளிலும் சர்ச்சையினை கிளப்பக் கூடிய விவகாரம் அயோத்தி தாக்குதலேயன்றி வேறில்லை. அதாவது எதிர்கட்சிக்கு ஆளும் கட்சி மீது தாக்குதல் நடத்த நல்ல அவல்கிடைத் திருக்கின்றது. இரு அவைகளிலும், ஒரே துவையலுக்கு பஞ்சமிருக்கப் போவதில்லை.

என்றாலும் பாகிஸ்தான் தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக இந்தியா நம்புவதனால் பாகிஸ்தான்

அ. கலைவாணி

தீவிரவாத்தைத் தடுக்க ஏதாவது செய்து தான் ஆக வேண்டும் . குறைந்த பட்சம் தீவிரவாதிகளை ஒடுக்க தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிக்கை மட்டுமே என்றாலும், கூட வெளியிட்டுத்தான் ஆக வேண்டும்.

இல்லையேல் இந்தியா பாகிஸ்தான் மீது அதிருப்திகொள்ள நேரிடும்,

எனவே எல்லாமே பாகிஸ்தானின் கையில் இருப்பதாகவே தான் நம்பத் தோன்றுகின்றது. இந்தியாவுடன் நட்புறவைத் தொடர்வதும் அதனை வெட்டிக் கொண்டு துவேசத்தை ஏற்படுத்துவதும் பாகிஸ் தானிடமேயுள்ள உபாயங்களாக இந்தியா நம்புகின்றது. இதில் எதை பாகிஸ்தான் கடைப்பிடிக்கவோ கைக்கொள்ளவோ போகின்றது....? என்பதே இன்று பாகிஸ் தானைச் சுற்றி வளைத்திருக்கும் வினா வாகும் என்றால் மிகையில்லை. □



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

**கிரிக்கெட்போட்டியை** பொறுத்து மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் போட்டியே அதிகப்படியான விறு விறுப்பை ஏற்படுத்துகின்றது. சிக்சர், பவுண்டரி என வீரர்கள் விளாசி இரசிகர்களுக்கு மகிழ்ச்சியைஊட்டுவார்கள்.

இதில் இன்னும் விறுவிறுப்பைக் கூட்டும்வகையில்சர்வதேச கிரிக்கெட் சபை கொண்டு வந்த விதிமுறைக்கு அமைய நடைபெற்ற முதலாவது போட்டியில் உலக ஜாம்பவான் அவுஸ்திரேலியாவை இங்கிலாந்து மண்டியிடச் செய்தது.

இதில் இரண்டு முக்கிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது. ஒன்று களத்தடுப்பு கட்டுப்பாடு 15 ஓவரில் இருந்து 20 ஓவராக அதிகரிக்கப்பட்டது. மற்றையது கால்பந்து பாணியில் மாற்று வீரரைப் போட்டியின் எந்தநேரத்திலும் மாற்றிக் கொள்வது. ஆனால் ஒரு முறை வெளியேறிய வீர் மீண்டும் களமிறங்க



## அஸ்தமனத்தின் ஆரம்பமா?

முடியாது. மாற்று வீரர் களத்தடுப்பு மட்டுமல்ல துடுப்பாட்டமும் செய்யலாம்.

இது பல கிரிக்கெட்அணிகளின் தலையெழுத்தையே மாற்றும் என முன்னாள் வீரர்கள் கருத்துத் தெரிவித்தனர். இந்த நிலையில் கடந்த வியாழனன்று நடைபெற்ற அறிமுகப் போட்டியில் தற்போது தட்டுத்தடுமாறி வரும் உலக ஜாம்பவான் அவுஸ்திரேலியா படுதோல்வியைச் சந்தித்தது.

முதலில் ஆடிய அவுஸ்திரேலியாவால் 220 ஓட்டங்களையே பெறமுடிந்தது. ஏன் 300 ஓட்டங்களைப் பெறுவதே சுலபமான விதிமுறை என்றவர்களுக்கு இது ஏமாற்றமே.

இது ஒன்றை மட்டும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. அதாவது ஆடுகளத்தின் தன்மையைப் பொறுத்தே போட்டி அமையும் என்பது.சிறப்பாக பந்து வீசிய சகலதுறை வீரர் கொலிங்வூட் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அவுஸ்திரேலியர்களின் திட்டத்தை முறியடித்தார். பதிலுக்கு உலகில் முன்னணி பந்து வீச்சாளர்களின் பலத்துடன் களமிறங்கிய அவுஸ்திரேலியாவால் இங்கிலாந்தின் வெற்றி இலக்கைத்தடுத்து நிறுத்தமுடியாது போனதுடன் ஒரு விக்கெட்டை மாத்திரமே பறிக்க முடிந்தது போன்றதெல்லாம் ஆடுகளத்தின் தன்மையைப் பொறுத்ததே. இது அவுஸ்திரேலிய அணி தொடர்பில் பல்வேறு கருத்துக்களை தோற்றுவித்துள்ளது. அவர்களின் பந்துவீச்சு பலம் குன்றி விட்டதா? அன்றி துடுப்பாட்டம் வலுவிழந்து விட்டதா? என்ற கருத்தெல்லாம் நிலவுகிறது.ஆனால் மேற்கூறிய காரணமே உண்மையாக இருக்கலாம்.

குறிப்பாக இங்கிலாந்து மண்ணில் பங்களாதேஷ் அணியிடம் படுதொல்வியடைந்த அவுஸ்திரேலியாவுக்கு இங்கிலாந்து அணி சிம்மசொப்பனமாக அமைந்துவிட்டது மட்டும் உண்மை.

இது வெற்றியில் திளைத்து இறுமாந்திருந்த அவ்வணியின் தலைவர் பொண்டிங்கிற்கு கௌரவத்தைக் காப்பாற்ற அறிக்கை விடும் நிலையை ஏற்படுத்தியதுடன் குறிப்பாக வெற்றி என்பது கடினமான ஒரு பணி என்பதையும் புரிய வைத்துள்ளது.

எனவே இங்கிலாந்து சுற்றுப் பயணம் அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட்டுக்கு கிடைத்த அஸ்தமனத்தின் ஆரம்பமாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**இங்கிலாந்தில்** அண்மையில் நடைபெற்ற " கால்பந்து சம்மேளன" (F.A) கிண்ணப் போட்டித் தொடரை பலமான மஞ்செஸ்ரர் யுனைட்டட் அணியை ஐந்துக்கு நான்கு என வென்று ஆர்சனல்அணி கிண்ணத்தை கைப்பற்றியது யாவரும் அறிந்ததே.

அதிஷ்டவசமாக ஆர்சனல்இந்தக் கிண்ணத்தை ஒரு கோல் வித்தியாசத்தில் வென்றாலும் போட்டியின் போது யுனைட்டட் மஞ்செஸ்டர் அணியே தனது திறமையை வெளிக்காட்டியது என்றால் மறுப்பதற்கில்லை. அந்த அணியின் 19 வயதான வெயின் றூனி உட்பட்ட வீரர்கள் வெற்றியைத்தனதாக்கிக் கொள்ள முயன்ற ஆர்சனல் அணியின்வெற்றியை அவர்களால் தடுக்க முடியாதுவிட்டது.

## இங்கிலாந்தின் நட்சத்திரம்



எவ்வாறேனும் இங்கிலாந்தின் மஞ்செஸ்ரர் அணியின் முன்வரிசை இளம் வீரரான றூனி இவ்வருடத்துக்கான சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றவராவார். 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்தின் நம்பிக்கை நட்சத்திரமாக எதிர் பார்க்கப்படும் இவர் உலகின் தலைசிறந்த வீரர் என்றால் மிகையாகாது.

இவர் கால்ப்பந்தாட்ட உலகுக்கு அறிமுகமானது இங்கிலாந்தின் எவர்ட்டன் கழகத்தில் இணைந்த பின்னராகும். அப்போது 16 வயதான இவர், 2002, 2003 ஆம் ஆண்டுகளில் அக்கழகத்துக்காக F.A கிண்ண போட்டிகளில் பங்கேற்று எட்டுப் போட்டியிலும் அதேயளவு கோல் அடித்து சாதனை படைத்தார்.அதே ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டித் தொடரில் எஸ்.சி வெயிஸ் அணிக்கெதிராக அடுத்தடுத்து மூன்று கோல்களையடித்து ஹட்ரிக் சாதனை படைத்தார். அதன் பின்னர் சில தினங்களில் நடைபெற்ற குயின்ஸ்பாக் கழகத்துக்கெதிராகவும் மூன்று கோல்களைப் போட்டார். அதே ஆண்டில் பிரிமியர்லீக்போட்டிகளில் ஆர்சனல் அணிக்கெதிராக அடித்த கோல் என்பதே சர்வதேசப் போட்டிகளில் அவர் அடித்த முதல் கோலாகும். அதன் பின்னர் எவர்ட்டன் கழகத்திலிருந்து விலகி 2004 ஆம் ஆண்டு மஞ்செஸ்ரர் கழகத்தில் இணைந்தார். எவர்ட்டன் கழகத்துக்காக அவர் 67 போட்டிகளில் 15 கோல்களைப் பெற்றுள்ளார். அவர் அவ்வாறு மாறக்காரணம் தனது திறமையை மேலும் விருத்தி செய்வதற்காக என தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மஞ்செஸ்ரர் அணிக்காக 2005 ஆம் ஆண்டு அவர் ஆடி மேலும் ஒரு ஹட்ரிக் சாதனையை நிகழ்த்தியுள்ளார். இது தொடர்பாக அதே அணியின் நட்சத்திர வீரரான நெதர்லாந்தைச்சேர்ந்த றூட்வேயின் திஸ்டல்றுய் கூறுகையில், மஞ்செஸ்டர் அணியில் அனைத்துச் சாதனைகளையும் றூனி முறியடிப்பது நிச்சயம் என்று தெரிவித்தார். றூனியின் ஹ ட்ரிக் சாதனை தம்மால் நினைத்துப் பார்க்க முடியாது என அக்கழகத்தின் தலைவர் சேர் அலெக்ஸ் பர்குஸன் தெரிவிக்கிறார்.

—————————— *வடிவேல்*

**கால்பந்து உலகில்** அசைக்கமுடியாத அணி என்பதை காலத்துக்குக் காலம் பிரேசில் அணி நிரூபித்து வருகின்றது.

இதற்கு அவ் அணியில் காலத்துக்கு காலம் உதயமாகும் உன்னத வீரர்கள் கைகொடுக்கின்றனர்.

குறிப்பாக 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண போட்டியில் இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தகுதி பெறுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி பின் ஒருவாறு தகுதி பெற்று பின் உலகக் கிண்ணத்தையே கைப்பற்றியது பிரேசில் என்பது அனைவருக்கும் நினைவிருக்கும்.

இதில் நட்சத்திர வீரர் றொனால்டோ அதிக கோல்களை அடித்து அசத்தினார். இப்படி பிரேசில் பங்கேற்கும் சம்பியன் கிண்ணப் போட்டிகளை அது எளிதில் இழந்து விடுவதில்லை.

இந்த வரிசையில் ஜேர்மனியில் நடைபெற்ற கான்படரேஷன் கால்பந்து சம்பியன் கிண்ணத்தை றொனால்டோ இல்லாமலேயே பிரேசில் அணி கைப்பற்றியது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் பல இளம் வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி எதிரணிகளை அசரவைத்ததுதான்.இவர்களில் இளம் வீரர் ராபின்ஹோ குறிப்பிடத்தக்கவர்.

என்னை விட சிறந்த வீரராக வருவார் என்கிறார் ஜம்பவான் பீலே. அவரை நம்பி எவ்வளவு வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம் என்கிறார் றொனால்டோ. இப்படி கால்பந்து ஜாம்பவானும் நிகழ்கால நட்சத்திரமும் ஒருவரை புகழ்ந்தால் கழகங்களைக் கேட்கவாவேண்டும். அந்த துடிப்புமிக்க வீரரை வளைத்துப் போடவரிந்து கட்டுகின்றன.

வழக்கம்போல் ரியல்மட்ரிட் முன்னணியில் இருக்கிறது. சுமார் 100 கோடி ரூபாய் தர தயாராக இருக்கிறது. அது சரி யார் அந்த வீரர்? அவர்வேறு யாருமல்ல கான்படரேஷன் கால்பந்து தொடரில் கலக்கிய 21 வயது ராபின்ஹோதான்.

கால்பந்து அரங்கில் பிரேசிலின் ஆதிக்கத்தை சொல்லித் தெரிய வேண்டியதில்லை உலகக் கோப்பை (ஐந்து முறை சம்பியன்) முதல் எந்த ஒரு சம்பியன் பட்டத்தையும் விட்டு வைப்பதில்லை. ஒரு காலத்தில் பீலே கைகொடுத்தார். பின்னர் றொனால்டோ, ரிவால்டோ, றொனால்டினோ என நட்சத்திர வீரர்கள் வந்து



## வளமான வாழ்வு தந்த கால்பந்து

கொண்டே இருக்கின்றார்கள். இவர்களது வரிசையில் இன்னொரு புயலாக புறப்பட்டுள்ளவர் தான் ராபின்ஹோ, முன்பு பீலே விளையாடிய அதே சான்டோஸ் கழக அணியில் தனது கால்பந்து வாழ்க்கையை தொடக்கினார். முன்கள வீரராக அற்புத ஆட்டத்தை வெளிப்படுத்தினார். விளைவு 2002,2004 இல் சான்டோஸ் கழகம் சம்பியன் பட்டம் வென்றது 2004 இல் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்ட ராபின்ஹோ தங்கப்பந்து விருது பெற்றார்.

இவரது திறமை உள்ளூர் அளவில் கொடி கட்டிப் பறந்த போதும் முக்கிய தொடரில் விளையாடினால் தானே உலக அளவில் பெயர் பெறமுடியும். இந்த வாய்ப்புக்காக காத்திருந்தவருக்கு கான்படரேஷன் தொடர் வரமாக அமைந்தது றொனால்டோ விலக பயிற்சியாளர் ராபின்ஹோவிற்கு வாய்ப்பளித்தார்.

ஒரு மகத்தான வீரருக்கு மாற்றாக விளையாடுகிறேன் என்ற பயமில்லாமல் செயற்படமாட்டார் ராபின், கான்படரேஷன் போட்டிகளை பார்த்தவர்கள் இவரது ஆட்டத்தை மறந்திருக்க மாட்டார்கள் முன்களத்தில் அட்ரியானோவுடன் இணைந்து முத்திரை பதித்தார்.

தற்காப்பு வளையத்தை உடைத்து பந்தை துல்லியமாக மாற்று வீரரிடம் கொடுப்பதில் திறமைகாட்டினார். இறுதிப்போட்டியில் ஆர்ஜன்டீனா வீரர்களை அசரவைத்து அணிக்கு கோப்பையை பெற்றுக் கொடுத்தார்.

தற்போது ராபினை ஒப்பந்தம் செய்ய ஸ்பெயினின் பிரபல ரியல் மட்ரிட் கழகம் களத்தில் இறங்கியுள்ளது. மட்ரிட்டை பொறுத்த வரை திறமை எங்கிருந்தாலும் கோடிகளைக் கொட்டி இழுக்க தயங்காது. பெக்காம், றொனால்டோ, றொபர்ட்டோ கார்லொஸ், என உலகின் அத்தனை நட்சத்திரங்களும் இந்த கழகத்தில் தான் உள்ளனர். ராபினை ஒப்பந்தம் செய்வதில் மட்டும் சின்ன சிக்கல் ஏற்பட்டுள்ளது. இவரை விடுவிக்க சான்டோஸ் கழகம் 221 கோடி ரூபாய் கேட்கிறது இந்த சர்ச்சைக்கு தீர்வுகாணும் முயற்சியில் பீலே போன்றவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ராபினும் பிரேசிலை விட்டு வெளியேறவே ஆர்வமாகவுள்ளார். வறுமையில் வாடிய எனக்கு கால்பந்து தான் வளமான வாழ்வைத் தந்தது பிரேசில் இப்போது பாதுகாப்பான இடமாக இல்லை. எனது அம்மாவை கடத்தியவர்கள் 40 நாட்கள் கழித்துதான் விடுவித்தார்கள் எனவே மாட்ரிட்சென்று அங்கேயே இருக்க விரும்புகிறேன் ரியில் மட்ரிட் அணிக்காக விளையாட காத்திருக்கிறேன் ஒப்பந்தம நல்லபடியாக அமையும் என்கிறார்.



ராபின்ஹோ

# Restoring the Livelihoods of Tsunami Victims

Restoration of livelihoods to families is a key protection factor for all children affected by the Tsunami. In the aftermath of Tsunami, Save the Children in Srilanka engaged into a series of projects through partner organisations aiming to restore community and household economies by replacing lot productive assets and providing financial support. These projects are being implemented in Ampara, Batticaloa, Jaffna, Kilinochchi, Matara and Trincomalee Districts.

We are looking for committed, energetic, dynamic individuals to join our team.

Vacancies exist for the following positions.

**Partnership Development Manager**
The partnership Development Manager is responsible for the development implementations, and monitoring of programmes to achieve SCiLS's mission through partner organisations. The partnership Development Manager is also responsible for playing a proactive role in advocacy at different levels. The work involved includes programme planning and management, budgetary responsibilities, management reporting and line management responsibilities.

**Base Stations Kilinochchi**

**Qualifications and Experience:**
**Essential**
* post Graduate degree in Social Sciences.
* About 5years of experience in the area of development of livelihoods.
* Analytical skills and experience in project planning and field experience with programme management.
* Experience in advocacy initiative.
* Skills related to computer literacy,finacial management and report writing.
* Command of written and spoken English with fluency in one or more of the local languages.
* Ability and willingness to travel to all parts of the country.
* Strong interpersonal skills with special emphasis on managing teams.
* Skills related to training and capacity building of local partners.

**Desirable**
* Good understanding of goverment structures.
* Contacts within the NGO community, donor agencies and goverment departments.
* Previous experience with development in terventions in the area of Child Rights.
* Knowledge of third national language.

**Partnership Management Officer**
The partneship Management officer is responsible for the day to day coordination of programme partnerships supervised by the partnership Development manager. the Partnership management officer has responcibility for programme implementation at district level and is expected to take initiatives to improve the quality of the cooperation with partners.

**Base Stations: Ampara, Kilinochchi and Trincomalee**

**Qualifications and Experience:**
**Essential**
* Graduate degree in Social Sciences or equivalent with preferably 3years experience in development organisations.
* Good analytical skills and field experience in programme management.
* Understanding of development issues related to children.

**Field Officers**
A field officer assists partners in project implementation and monitor progress against targets/objectives. Furthermore FO's refers to operational plans in order to implement activities.

**Base Station: Kilinochchi**
**Qualifications and Experience:**
**Essential**
* Participate in livelihoods assessments and/or Monitoring and evaluation visits in the district.
* Close monitoring of partners' livelihood projects activities.
* Contribute to coordinating livelihood project activities between partners and ensure that best practices are documented and shared amongst partners.
* Ability to innovate along with the positive attitude to learn from communities
* Skills related to participatory methods, computer literacy.
* Good knowledge of written and spoken skills with fluency in one or more of the local languages, skills in report writing.

**Desirable**
* Exposure to development intervention in the area of Child rights.
* Experience in working with partners.
* Knowledge of third national languages.
* Ability to innovate along with positive attitude to learn from communities.
* Skills related to participatory methods, computed literacy and financial management.
* Good knowledge written and spoken English with fluency in one or more of the local languages.
* Skills in report writing.
*Ability and willingness to travel to all parts of the country.
* Good personal and liaison skills.

**Desirable**
* Exposure to development intervention in the area of Child Rights.
* Experience in working with partners.
* Knowledge of third national language.

**A highly competitive remuneration package awaits the selected candidates**
The above positions would be initially for a period of one year.

**Save the Children in Srilanka is an equal opportunity employer an ! does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**
Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application. and on the top left hand corner of the envelope please. ensure that the names of two non-related referees are provided.

Applications together with an apporx. 300 word. hand written essay on how your previous work experience will assist in fulfilling the requiremets of the above post, should be submitted to:

**Save the children**
**In SriLanka,**
**Human Resources Unit,**
**58A, Horton place, Colombo-07.**

**Closing Date: 20th July 2005**
**Only Applicants selected for the interview will be contacted.**
**No telephone inquiries plases.**

Save the Children in Sri Lanka (SCISL) is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCISL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony and Peace.** Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

(சி-12320)


## லண்டன் குண்டுவெடிப்பில் ஒரு இந்தியப் பெண் பலி!

லண்டனில் மாடி பேருந்து தகர்க்கப்பட்டதில் ஒரு இந்தியப் பெண்ணும் பலியாகியுள்ளார். அவர் பெயர் நீட்டு ஜெயின். 36 வயதான அவர் கடந்த ஏழாம் திகதி காலை சுரங்க ரயிலில் பயணம் செய் துள்ளார். அதில் குண்டு வெடித்ததும் காயமின்றி தப்பி ரயில் நிலை யத்தை விட்டு வெளியே வந்துள் ளார்.

அலுவலகம் செல்வதற்காக மாடி பேருந்தில் ஏறியிருக்கிறார். ரயில் நிலையத்தில் நடந்த சம்பவத்தை தனது ஆண் நண்பர் கவுஸ் அலியிடம் கையடக்கத் தொலைபேசியில் கூறி தான் மாடி பேருந்து பிடித்து அலுவலகம் செல்லப் போவதாக 9.37 மணிக்கு கூறியிருக் கிறார். அவர் அந்தப் பேருந்தில் ஏறிய பிறகு அது 9.45 மணிக்கு தவி ஸ்டாக் சதுக்கம் அருகே குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டது.

அதில் நீட்டு ஜெயின் பலியாகி விட்டார். காணாமல் போனவர்கள் பட்டியலில் அவர்பெயர் இடம் பெற்றுள்ளது. அவரது புகைப் படத்தை லண்டன் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. நீட்டு ஜெயின் லண்டனில் கணினி ஆய்வாளராகப் பணியாற்றி வந்தார்.

## குஜராத்தில் வெள்ளம் ஓய்ந்தது; துயர்துடைப்புப் பணி ஆரம்பம்

(புதுடில்லி)

குஜராத் வெள்ள நிவாரணத் துக்கு துயர்துடைப்பு நிதியில் இருந்து 500 கோடி ரூபா உதவி செய்ய மத்திய அரசால் வழங்கப் பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் பத்து நாட் களாகப் பெய்த அடை மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நான்கு மாவட்டங்கள் நீரில் மூழ்கின. 150 பேருக்கு மேல் இறந்தனர். இரா ணுவம், விமானப்படை மீட்பு பணி யில் இறங்கின. இப்போது அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பி யுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவா ரணம் அளிக்க தேசிய துயர் துடைப்பு நிதியிலிருந்து குஜராத் வெள்ள நிவாரணத்திற்கு மத்தியரசு 500 கோடி ரூபாவை மானி யமாக அனுமதித்துள்ளது.

குஜராத் சேத விபரத்தை நேரில் அறிவதற்கு மத்திய அரச உயர்மட்டக்குழு குஜராத்சென்றுள் ளது. குஜராத்தில் வெள்ளத்தின் சீற்றம் தணிந்துள்ளது. நிலை மையை மத்திய அரசு உன்னிப் பாக கவனித்து வருகிறது என்று மத்திய அரசு அதிகாரபூர்வ அறிக் கையில் கூறப்பட்டிருக்கிறது.

## ஜோதிபாசுவுக்கு கருணாநிதி வாழ்த்து

92 ஆவது பிறந்த நாள் காணும் மேற்கு வங்க முன்னாள் முதல் வரும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி யின் மூத்த தலைவர்களில் ஒரு வருமான ஜோதிபாசுவுக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

அதில் அவர், தாங்கள் மென்மேலும் பல் லாண்டுகள் வாழ நான் உளமார வாழ்த்துகிறேன். தேசிய அரசியலில் ஒரு வழிகாட்டியாக இருந்து மதிக் கத்தக்க பல்வேறு சேவைகளைப் புரிந்து வருவதற்காக உங்களை இந்த நாடு என்றென்றும் நினைவு கூரும். தொடர்ந்து உங்களுக்கு நன்றிக்கடன்பட்டதாக இருக்கும். மேற்கு வங்க மாநிலத்தில் ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்கு மேல் முதலமைச்சராகவும், கம்யூனிஸ்ட் கட்சியில் ஈடுஇணையற்ற தலை வராக ஏறத்தாழ 50 ஆண்டு களுக்கும் மேலாகவும், உழைக்கும் வர்க்கத்தினருக்கு வாழ்நாள் தோழராகவும் இருந்து ஓய்வின்றியும் தொய்வின்றியும் இந்த மூத்த வயதிலும் தாங்கள் ஆற்றி வரும் ஆற்றல் மிகு பணி பாராட்டத்தக்கது. என வாழ்த்தியுள்ளார்.

# பாண்டியன் வாணிபம்

Coloris France Colourbank

## வன்னி மண்ணில் நிறங்களின் சோலை அறிமுகவிழா

காலம்-13-07-2005
நேரம்-மு.ப.10.00 மணி
இடம்-பாண்டியன் வாணிபம்
கரடிப்போக்குச்சந்தி, கிளிநொச்சி.
தொ.பே-021-228 5844,5845

MACKSONS PAINTS WORLDWIDE Multilac®




## வர்ண வங்கி திறப்புவிழா

காலம்-12-07-2005
நேரம்-மு.ப.11.30 மணி
இடம்-கந்தவேலன் ரேடர்ஸ்
இல-110,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே-021-222 2822

உயர்ந்த தரம் குறைந்த விலை

நிறங்களின் சோலை
நிகழ்வு சிறக்க
நீங்களும் கலந்து
வண்ண நிறங்களைக்
கலந்து மகிழுங்கள்.

மகிழ்வுற அழைக்கும்
பாண்டியன் வாணிபம்

SM Graphics

SGS UKAS SLS WINNER OF NATIONAL AND NCE GOLD AWARDS FOR EXPORT EXCELLENCE MICRON Auto GLOSS Coloris France The Colourbank MITSUKO

(சி-12413)

COLORIS FRANCE Colourbank

# இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணிக்கு யாழ். மாவட்டத்தை சேர்ந்த ஐந்து வீரர்கள் தெரிவு

இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணிக்கு (23 வயதுக்குட்பட்ட) யாழ். மாவட்டத்தில் இருந்து ஐந்து வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் எதிர்வரும் பதின்நான்காம்திகதி கொழும்பு செல்லவுள்ளனர்.

கடந்த வாரம் ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் யாழ்பொதுவிளையாட்டு மைதானத்தில் வீரர்களை தெரிவு செய்வதற்காக கொழும்பிலிருந்து இலங்கை உதைபந்தாட்ட பயிற்சியாளர் சம்பத்பெரேரா மற்றும் கோல்காப்பாளர்களுக்கான பயிற்சியாளர் சந்திர சிறி ஆகிய இருவரும் வருகை தந்து பயிற்சி வழங்கினர். இந்தப் பயிற்சி முகாமில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 38 வீரர் கள் கலந்துகொண்டனர். இவர்கள் யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக்குகளைச் சேர்ந்த கழகங்களில் இருந்து பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு வீரர்கள் முதலில் தெரிவு செய்யப்பட்டபோதிலும் இறுதியாக ஐந்து வீரர்கள் மட்டுமே மேலதிக பயிற்சி களுக்காக கொழும்பு செல்லவுள்ளனர். நீண்டகாலத்திற்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து தேசிய அணிக்கு பயிற்சிக்காக வீரர்கள் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சீ)

# சைக்கிள் ஓட்டப் போட்டியில் அளவெட்டி வாசி சாதனை

சைக்கிளோட்டப்போட்டியில் 50ஆவது வயதில் அளவெட்டிவாசிசாதனை நிகழ்த்தியுள்ளார்., கடந்த மாதம் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகத்தின் 31ஆவது ஆண்டுநிறைவையொட்டி நடாத்தப்பட்ட சைக்கிளோட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 50வயதில் சைக்கிளோட்டப்போட்டியில் கலந்துகொண்டு முதல் இடம் பெறுவது இதுவே முதல்தடவையாகும். இந்த சாதனையை வைத்தியலிங்கம் -கைலைநாதன் என்பவரே நிகழ்த்தியுள்ளார். தனது 15 வயதில் சைக்கிளோட்டப் போட்டியில் முதல் தடவையாக பங்குபற்றிய இவர் 156 போட்டிகளில் பங்குபற்றி 38 தடவைகள் முதலாம் இடத்தையும், 27 தடவைகள் இரண்டாம் இடத்தையும் 22தடவைகள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். தனது சைக்கிளோட்ட வரலாற்றில் 250 மைல்தூரப் போட்டியில் கலந்து கொண்டதே அதிகதூரம்என்பது குறிப்பிடத்தக்கது. (கீ)

# புதுக்குடியிருப்பு சுப்பராங் அணி சம்பியன்

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு முல்லை மாவட்ட விளையாட்டுத் துறையினரும் முல்லை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனமும் இணைந்து நடாத்திய அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டியில் சுப்பராங் அணி சம்பியனானது. இறுதி நாள் நிகழ்வில் முல்லை மாவட்ட விளையாட்டுத் துறை பொறுப்பாளர் காளி, முல்லை மாவட்ட கடற்புலிகளின் பிரதேச பொறுப்பாளர் அரவிந்தன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் அளம்பில் இளந்தென்றல் அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு உதிக்கும் திசை அணி மோதியதில் 0.2 என்ற கோல் கணக்கில் உதிக்கும் திசை அணி வெற்றி பெற்றது. இதனை தொடர்ந்து முதலாம் இடத்துக்கான போட்டியில் புதுக்குடியிருப்பு விக்னேஷ்வராவை எதிர்த்து சுப்பராங் அணி மோதியதில் 0.1என்ற கோல் கணக்கில் சுப்பராங் அணி வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக சுப்பராங் வி.கழகத்தை சேர்ந்த கபிலன் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக ரொபின்சன் தெரிவு செய்யப்பட்டார். மூன்றாம் இடத்துக்கு 3000 ரூபா ரொக்கப்பணமும் இரண்டாம் இடத்துக்கு 5000 ரூபா ரொக்கபணமும், முதலாம் இடத்துக்கு 7000 ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்பட்டது.

# நட்புறவு கடினப்பந்து கிரிக்கெட் போட்டி பரியோவான், கண்டிதிருத்துவக் கல்லூரி வெற்றி

கண்டி திருத்துவக்கல்லூரி-யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ், சென்பற்றீக்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணிகளுடன் நட்புறவு ஆட்டத்தில் கடந்த வெள்ளி, சனி தினங்களில் விளையாடியது. வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் பரியோவான் கல்லூரி இரண்டு விக்கெட்டுக்களால் திருத்துவக்கல்லூரியை வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கண்டி திருத்துவக்கல்லூரி அணித்தலைவர் தமது அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தார். 40 ஓவர் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருத்துவக்கல்லூரி 33.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் முனசிங்க 18 ஓட்டங்கள், ரட்நாயக்க 15 ஓட்டங்கள், துப்பரகங்கா14 ஓட்டங்கள், மிரண்டோ 12 ஓட்டங்கள், ஜயசிங்க 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நவநீதன் மூன்று விக்கெட்டுக்களையும் மதன்ராஜ், நிருபன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

115 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பரியோவான் கல்லூரி 39.2 ஓவர்களை எதிர்கொண்டு எட்டு விக்கெட் நஷ்டத்துக்கு 118 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் மதன்ராஜ் 34 ஓட்டங்களையும், நவநீதன் 24 ஓட்டங்களையும், மதுவர்மன் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் துப்பரகங்கா இரண்டு விக்கெட்டுக்களையும் முனசிங்க நான்கு விக்கெட்டுக்களையும் ஜெயசிங்க ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மறுநாள் சனிக்கிழமை காலை சென்பற்றீக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்பற்றீக்ஸ் கல்லூரியை திருத்துவக்கல்லூரி நான்கு விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். புனித பத்திசிரியார் கல்லூரி அணித்தலைவர் தமது அணியை துடுப்பெடுத்தாட பணித்தார். துடுப்பெடுத்தாடிய புனித பத்திசிரியார் கல்லூரி 33.3 ஓவர்களை எதிர்கொண்டு சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் ஜெனராஜ் 30 ஓட்டங்களையும், லதீஸ்வரன் 24 ஓட்டங்களையும், ஜெந்தன் 13 ஓட்டங்களையும் கொலின் 14 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் துப்பரகங்கா ஐந்து விக்கெட்டுக்களையும் முனசிங்க இரண்டு விக்கெட்டுக்களையும், யலின், ஜெயசிங்க தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கு 108 என்ற அடிப்படையில் களமிறங்கிய திருத்துவக்கல்லூரி 26.2 ஓவர்களில் தனது வெற்றி இலக்கை நான்கு விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது.

இதில் கங்கொட 34 ஓட்டங்களையும் முனசிங்க 32 ஓட்டங்களையும் ஜெயசிங்க 26 ஓட்டங்களையும் மிரண்டோ எட்டு ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கொலின் இரண்டு விக்கெட்டுக்களையும், விதுபாலா ஜனாராஜ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (கீ)





கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்க முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப் போட்டியில் வினோதஉடைப்போட்டியில் ப்ங்குபற்றிய சிறார்களையும் போட்டிகளில் வெற்றியீட்டி பரிசில்களை பெற்றுக்கொள்ளும் சிறார்களையும் படத்தில் காணலாம். (படங்கள்-சோதி)



..க்கச்சி கலைவாணி சவாரித்திடலில் நேற்று முன்தினம் ...பெற்ற சவாரிப்போட்டியில் ஒரு காட்சி. (12

# நட்வெஸ்ட் கிண்ண ஒருநாள் போட்டி பொண்டிங் சதம்: அவுஸுக்கு சிறப்பு வெற்றி



இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் கிண்ணத்துக்கான இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதன்படி முதலில் ஆடிய இங்கிலாந்து பிரெட்லீ, மெக்ராத், கஸ்பரோவிச் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சில் நிலை குலைந்தது. என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு கட்டத்தில் இங்கிலாந்து சொற்ப ஓட்டங்களுக்கு ஆரம்ப விக்கெட்டுக்களை இழந்த போதும் சகல துறைவீரர் பிளின்டொப் சிறப்பாக ஆடி 87 ஓட்டங்களைக் குவித்தார்.இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப்பெற்றது. பந்து வீச்சில் பிரெட்லீ ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.



இப்போட்டியில் வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்ற நிலையில் வெற்றியிலக்கு நோக்கி ஆடிய அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங்கின் அபார ஆட்டத்தால் 44.2 ஓவரில் மூன்று விக்கெட்டையிழந்து 224 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. பொண்டிங் 105 பந்துகளை சந்தித்து 111ஓட்டங்களை பெற்றார். ஆட்டநாயகனாக பொண்டிங் தெரிவானார்.

மூன்று போட்டிகள் கொண்டமேற்படி தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளன.

இதனால் இன்று நடைபெறும் மூன்றாவதும் இறுதியுமான போட்டி சவால் நிறைந்ததாகவும் பரபரப்புமிக்கதாகவும் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒருநாள் போட்டியில் புதிய விதி அறிமுகம் பலாபலனை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்

**-அசாருதீன்**

ஒருநாள் போட்டி விதிகளில் ஐ.சி.சி. திருத்தம் செய்துள்ளது. பொதுவாக விளையாட்டு மீதான ரசிப்புத்தன்மை மாறிக்கொண்டே வருவது சகஜம். எனவே அதற்கு தகுந்த மாதிரி விதிகளை மாற்றம் செய்து நல்ல விடை கிடைக்குமா என்று முயற்சி செய்து பார்க்கிறார்கள். அதில் என்ன விடை என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ரசிகர்கள் அதை விரும்புவார்களா,மாட்டார்களா என்பதை இப்போது சொல்ல முடியாது என்கிறார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் துடுப்பாட்ட வீரரு மான அசாருதீன்.





# கென்ய கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்றுநரை நியமிக்க முயற்சி

கடந்த 2003ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தொடரில் அரையிறுதிவரை முன்னேறிய கென்ய அணிக்கு 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு தயார்ப்படுத்தும் வகையில் புதிய பயிற்றுநர் ஒருவரை நியமிக்கும்பணியில் அணி மும்முரமாக இறங்கியுள்ளது.

இந்த அணியின் பயிற்றுநராக இருந்து கடந்த மார்ச்சில் திடீரென விலகிய ஆங்கிலேயரான அண்டி மோல்ஸ்க்கு பதிலாக பாகிஸ்தான் முன்னாள் வீரர் முதாசர் நாசர் தற்காலிகமாக பணியாற்றி வந்தார். அவரின் ஒப்பந்தக்காலம் கடந்த மாதத்துடன் முடிவடைந்ததால் புதிய பயிற்றுநரை நியமிக்கும் முயற்சியில் அணியின் முகாமையாளர் ஈடுபட்டுவருகின்றார்.

பெரும்பாலும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவரும் முன்னர் உதவிப் பயிற்றுநராக இருந்தவரான அண்டி கர்ஸ்டன் நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## சிந்தனைக்கு



இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக் கொடுத்ததில்லை; கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# யுத்தத்தை விரும்பும் அரசு!

திருமலை– உப்புவெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் மீது மேற்கொண்ட தாக்குதல் மூலம் யுத்த நிறுத்தகாலத்தில் நடத்தி வந்த மறைமுக யுத்தத்தை தற்போது பகிரங்கமாக நடத்துவதற்குத் தயாராகி விட்டது. என்றே துணிந்து கூறலாம்.

உப்புவெளியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது ஒரு புறத்தில் நன்கு திட்டமிட்டு குறிப்பிட்ட நபரைக் போராளி டிக்கானை கொன்றொழிப்பதற்கான நடவடிக்கை ஆகும். இதனை ஏற்கனவே போராளி டிக்கானைக் கொல்லப்போவதாகச் சிறிலங்கா புலனாய்வுத்துறை தெரிவித்திருந்தமை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இது ஒரு புறம் இருக்க பட்டப்பகலில் முற்பகல் 10.45 மணியளவில் சிறிலங்கா ஆயுதப்படையினரின் பாதுகாப்பிற்கும். கண்காணிப்புப் பகுதிக்கும் உட்பட்ட பகுதியில் இப்படுகொலைகள் நிகழ்ந்துள்ளமையானது அரசாங்கம் புலிகள் மீது யுத்தம் ஒன்றைத் திணிப்பதற்கு முழு அளவில் முற்பட்டு நிற்பதையேகாட்டுவதாய் உள்ளது.

அவ்வாறு இல்லாதுவிட்டால் இத்தகைய தாக்குதல் இடம் பெற்றிருக்க மாட்டது. மாறாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் சிறிலங்காப்படைத்தரப்பு இத்தாக்குதலில் ஈடுபட்டிருக்கின்றது. அத்தோடு தாக்குதல் நடத்தியோர் தப்பிச் செல்லவும் ஏற்பாடு செய்துள்ளது.

சுருக்கமாகக் கூறின் தாக்குதல் இடம்பெற்ற பகுதிக்குச் சிறிலங்கா படைத்தரப்பைச் சாராதவர்கள் சோதனைகள் இன்றி வாகனங்களில் வரவோ அன்றி வெளியேறவோ முடியாது. ஏனெனில் அப்பகுதி சிறிலங்காஆயுதப்படையின் பூரணபாதுகாப்பிற்கு உட்பட்ட பகுதியாகும். இந்நிலையில் சிறிலங்காப்படைத்தரப்பின்றி வேறுயாரும் சம்பந்தப்பட்டிருப்பின் அவர்கள் இப்பகுதிக்குள் ஆயுதங்களை பிரயோகிக்காது பிரவேசிக்கவோ, திரும்பிச் செல்லவோ முடியாது. ஆனால் அவ்வாறு எதுவும் நடந்ததாக இல்லை.

இந்நிலையில் தமக்கும் இப்படுகொலைக்கும் சம்பந்தம் இல்லை எனச் சிறிலங்கா இராணுவத் தரப்பு கூறுவது கேலிக்கூத்தானதாகும். மறுவளமாகக் கூறுவதானால் தமது பாதுகாப்பு செயற்பாடுகளையே சிறிலங்கா இராணுவத்தரப்பு கேலிசெய்வது போன்றதாகும் அதுமட்டுமன்றிச் சிறிலங்காப் பொலிசாரின் நடவடிக்கையில் தாம் தலையிடுவதில்லை என இராணுவத்தரப்புக் கூறுவதும் சிறுபிள்ளைத்தனமானதாகும்.

அண்மைக்கால சிறிலங்கா அரசினது–குறிப்பாகச் சிறிலங்கா ஆயுதப்படையினரின் நடவடிக்கையானது யுத்த நிறுத்தத்திற்கு மாறானதாகவும், விடுதலைப்புலிகளை ஏதோ ஒருவகையில் சீற்றத்திற்கு உள்ளாக்கி யுத்தத்திற்குள்தள்ளுவதையே நோக்கமாகக் கொண்டதாகவுமுள்ளது.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து அவர் தற்பொழுது எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு யுத்தம் ஒன்றே தீர்வாக முடியும். அதாவது யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்டால் சனாதிபதி சந்திரிகா சந்திக்கும் பெரும் நெருக்கடிகளுக்கு அவரால் இலகுவில் தீர்வு கண்டுவிடமுடியும்.

சனாதிபதி சந்திரிகாவின் முன் இன்று பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கத்தில் இருந்து விலைவாசி ஏற்றம் சனாதிபதித் தேர்தல் என பல்வேறு பிரச்சினைகளும் உண்டுஆனால் தற்போதைய அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையில் அத்தகைய பிரச்சினைகளுக்குத் சனாதிபதி சந்திரிகாவினால் தீர்வு எதனையும் காணமுடியாது. இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா நெருக்கடியின்றி ஆட்சியைத் தொடர்வதற்கு தற்பொழுது ஒரே வழி யுத்தத்தை ஆரம்பிப்பதே, அதாவது அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி செய்வதே.

யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுமானால் அரசிற்கெதிரான போராட்டங்கள், பொதுக்கட்டமைப்பு விவகாரங்கள் உட்பட்ட பல விடயங்களில் அரசாங்கம் அக்கறை காட்டத் தேவையில்லை. ஒரு புறத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ்அரசியற்கட்சிகளினது தொழிற் சங்கங்களினதும் போராட்டங்களுக்குத் தடைகளை விதிக்கமுடியும். அரசியல் எதிரிகளைஒடுக்கமுடியும். இன்னொரு புறத்தில் தமிழ்மக்களின் நியாயப்பூர்வ உரிமைகளை வழங்க வேண்டிய தேவையில்லை.

இதற்காக யுத்தத்தை பெரிதும் விரும்பும் சனாதிபதி சந்திரிகா யுத்தத்தை விடுதலைப்புலிகளே ஆரம்பித்தனர் என்று கூறுவதற்கானதொரு சந்தர்ப்பத்தை உருவாக்கும் வகையில் நடவடிக்கைகளை முனைப்புப்படுத்தியுள்ளார். இவற்றின் வெளிப்பாடே மறைமுக யுத்தத்திற்கும் மேற்பட்டவிதத்திலான தாக்குதலில் சிறிலங்காஇராணுவத்தரப்பு இறங்கியுள்ளமையாகும்.

யுத்தம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விருப்பமாகையால் அதனை விடுதலைப்புலிகளும் தெரிவு செய்வது அறிவுடமையற்றதாகச் சிலர் கருதலாம். ஆனால் இது தவறான சிந்தனையாகும். ஏனெனில் யுத்தமின்றி தமிழ்மக்களின் போராட்டம் பலவீனப்பட்டுப் போவதைவிட யுத்தத்தின் மூலம் தமிழ் மக்கள் தங்கள் விடுதலையைப் பெற்றுக்கொள்ளுதல் மேலானதாகவே இருக்கும்.

# அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்க பாராளுமன்றத்தில் விசேட சட்ட மூலம்

(கொழும்பு)

இலங்கையில் இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனங்களை கண் காணிப்பது தொடர்பாக விசேட சட்டமூலமொன்று கொண்டுவரப்பட விருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.அரசசார்பற்ற நிறுவனங் களின் நடவடிக்கைகளை கண் காணிக்கும் நோக்கில் கொண்டு வரப்படும் எந்த சட்டமூலங்களும் அந்த நிறுவனங்களுக்கான சுதந்திரத்தை பாதிக்காதெனவும் சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்தச் சட்டமூலத்தை தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாக சமூக சேவைகள் அமைச்சின் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நிறை வேற்று அதிகாரி மங்கள குணரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள 70 அரச சார்பற்ற நிறுவனங்கள் இதுவரை அரசாங்கத்தில் பதிவினை மேற் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டி யுள்ள சமூக சேவைகள் அமைச்சின் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நிறைவேற்று அதிகாரி மங்கள குணரட்ன, அரசசார்பற்ற நிறுவனங் கள் மீதான கண்காணிப்புத் திட்டத்திற்கு அனைத்து மாவட்டங் களிலும் பட்டதாரிகள் பயன்படுத் தப்படுவார்களெனக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத் திற்கு பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆதரவு தெரிவிப்ப தாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ரயில் –பாரஊர்தி விபத்து!

## —ஒருவர் பலி;மூவர் காயம்

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயிலுடன் பாரஊர்தி ஒன்று மோதியதில் ஒருவர் பலியானதுடன், மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள திராய்மடு குடியேற்ற கிராமத்திற்கு சமீபமாக வுள்ள பாதுகாப்பு ரயில் கடவை ஒன்றிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு ரயில் நிலைய அதிகாரி தெரிவித்தார். மேற்படி குறித்த ரயில் கடவையைத் தொண்டர் நிறுவனமொன்று அமைத்துக்கொடுத்தபோதும் அதற்கான பராமரிப்பை ரயில் நிலைய அதிகாரிகள் வழங்கவில்லையென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# நிவாரண விநியோகத்தில் மோசடி; விசாரணை விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

கடற்கோள் நிவாரணப் பொருட் களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் அரசாங்க நிறுவனங்களில் இடம் பெற்ற மோசடிச்சம்பவங்கள் தொடர் பான விசாரணைகளை சனாதிபதி விசாரணைகள் ஆணைக்குழு மேற் கொள்ளவுள்ளது.

அரசாங்க நிறுவனங்களில் நிவார ணப் பங்கீடு தொடர்பில் இடம்பெற்ற மோசடிச் சம்பவங்கள் குறித்து தமக்கு பலமுறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றி ருப்பதாகத் தெரிவித்துள்ள சனாதிபதி விசாரணைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஏ.ஏ. விக்கிரமசிங்க இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசார ணைகளை அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பிக்கவிருப்பதாகக் கூறினார்.

தேசிய பாடசாலைகளில் ஆண்டு ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிப் பதில் இடம்பெற்ற மோசடிகள் தொடர் பான விசாரணைகள் குறித்து கவனம் செலுத்திவந்ததால், ஏனைய அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிச் சம்பவங்கள் குறித்து விசாரணை மேற் கொள்ள முடியவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக அடுத்தவாரம் முதல் ஏனைய அரசாங்க நிறுவனங் களில் இடம்பெற்ற மோசடிச் சம்பவங் கள் குறித்து விசாரணை நடாத்து வதற்கு தீர்மானித்திருப்பதாக சனாதி பதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் ஏ.ஏ.விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் யாப்பின்படி குறித்த காலத்தில் சனாதிபதித்தேர்தலை நடத்த வேண்டும்

## மக்கள் சக்திப் பேரணியில் ரணில் உரை

(கொழும்பு)

அரசியல் யாப்பின்படி சனாதிபதித்தேர்தலை குறித்த காலப்பகுதியில் நடத்த வேண்டும். மக்களின் வாக்களிக்கும் உரிமையை எவராலும் பறிக்க முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மக்கள் சக்திப பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ; மக்களை ஒன்றிணைத்து மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள இந்தப் பிரேரணை மேற்கொள்ளப்படுகின்றது. மக்களின் பலத்தை மக்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதனை இன்று நாம் இலங்கையில் செய்ய வேண்டும். ஆறுவருடங்களுக்கு ஒரு முறை வழங்கும் வாக்குரிமையை பறிக்க முடியாது எனத தெரிவித்தார்.

# சனாதிபதித்தேர்தல் எப்போது? ஆணையாளர் அடுத்தமாதம் அறிவிப்பார்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் எப்போது நடைபெறும் என்பது பற்றிய தேர்தல் ஆணையாளரின் முடிவு அடுத்த மாதம் அறிவிக்கப்படும் எனத் தெரி விக்கப்படுகிறது.

அடுத்த சனாதிபதித்தேர்தல் இந்த வருடத்திற்குள் நடைபெறுமா? இல்லையேல் அடுத்தாண்டு நடை பெறுமா? என்பது பற்றிய தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநா யக்கவின் முடிவு அடுத்தமாதம் அறி விக்கப்படுமென தேர்தல் திணைக்கள வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின் றன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டாவது தடவையாக பதவியேற்ற பின் ஆறு வருடபதவிக்காலம் இவ்வாண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி பூர்த்தியடைகின்றது. அந்தத் திகதிக்கு முன்னர் சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஐக்கியதேசியக் கட்சி கூறிவருகின் றது.

எனினும் அரசியலமைப்பிற்கு அமைய அடுத்தாண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னரே தேர்தல் நடத்தப்படவேண்டுமென அரசாங்கம் கூறிவருகின்றது. எனினும் இது பற்றி தேர்தல் ஆணையாளர் இதுவரை எந்தவிதமான அறிவிப்பினையும் விடுக்கவில்லை.

எவ்வாறாயினும் அரசியலமைப் பின்படி பதவி வகிக்கும் சனாதி பதியின் பதவிக்காலம் முடிவடைய இரண்டு மாதங்கள் இருக்கையிலும் ஆனால் ஒரு மாதத்திற்கு முன்னரும் சனாதிபதித்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இதன்படி சனாதிபதியின் இரண் டாவது பதவிக்காலம் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகியதாகக் கருதப்பட்டால் சனாதிபதித்தேர்தல் இந்த ஆண்டு ஒக்ரோபர் 22 முதல் நவம்பர் 22 வரையிலான காலப்பகுதிக்குள் நடத் தப்படவேண்டும்.

தேர்தல் ஆணையாளர் அவ்வாறு செய்யத் தீர்மானித்தால் செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் சனாதிபதித்தேர் தலுக்கு வேட்புமனு கோரவேண்டும்.

ஆனால் இந்த விடயம் தொடர் பாக தேர்தல் ஆணையாளர் என்ன நடவடிக்கை எடுப்பார் என்பது பற்றி அடுத்த மாதமளவில் அறிவிப்பாரென தேர்தல் திணைக்கள வட்டாரத்தகவல் கள் தெரிவிக்கின்றன.

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி மாபெரும் பாதயாத்திரை

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக இம்மாத இறுதியில் ஜே.வி.பி மாபெரும் பாதயாத்திரையொன்றை நடத்தவுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு எதிரான மக்கள் விழிப்புணர்ச்சித் திட்டங்களை தற்போது அக்கட்சி நடத்தி வருகிறது. இரு வாரங்கள் நடை பெறும் இத்திட்டத்தின் கீழ் பல கூட்டங்களையும் ஜே.வி.பி நடத்துகிறது.

இந்த இரு வார மக்கள் விழிப்புண் [illegible] திட்டத்தின் முடிவில் இந்த மாபெரும் பாதயாத்திரையை நடத்தவுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# போரியல் விதியினை உதாசீனம் செய்யும் படையினரின் அடாவடியை அனுமதிக்க முடியாது

## -கிளி. தேசிய எழுச்சிப் பேரவை கண்டனம்

(அலுவலக செய்தியாளர்)

போரியல் விதியினை உதாசீனம் செய்யும் சிங்களப் படையினரின் அடாவடித்தனத்தினை அனுமதிக்க முடியாது என கிளிநொச்சி தேசிய எழுச்சி பேரவை தெரிவித்துள்ளது.

திருமலையில் விடுதலைப்புலிகள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காப்படைகளின் திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையினைத் தொடர்ந்தும் அங்கீகரிக்க மாட்டோம். மக்களின் காவலர்களான போராளிகளைத் தொடர்ந்து அழிக்கும் செயலானது எம்மைக் கடுஞ்சீற்றமடையச் செய்துள்ளது. பட்டப்பகலில் வந்தமுகமூடிகளான சிறிலங்காவின் அராஜகப் படைகளின் ஈனத்தனத்தைப் தமிழீழத் தலைநகரான திருமலையில் விடலாமா?

இலட்சியப்பற்றுள்ள ஆயுதமேந்திய போராளிகள் போர்நிறுத்தத்தினை மதித்து நிராயுதபாணிகளாகச் செயற்படும்போது, போரியல் விதியினை உதாசீனம் செய்யும் சிங்களப்படைகளும் அதன் அடிவருடிகளும் திட்டமிட்டுச் செய்த அடாவடித்தனத்தினை அனுமதிக்கமுடியாது எதற்கும் தயார் என்ற நிலையிலே பயிற்சி பெற்ற மக்களாகிய நாம் எதிரியினை ஆயுத முனையில் எதிர்கொள்ளத் தயாராகி விட்டோம். டிக்கான், இளம்புலி உள்ளிட்ட நால்வருக்கும் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நீங்கள் அழிக்கப்பட்ட இடத்திலிருந்து எதிரிக்குச் சமாதி கட்டத் தயாராக இருக்கின்றோம். திருமலைவாழ் எம் தமிழ் உறவுகளே! உங்களோடு இணைந்து எதிரிகளை விரட்டத் தயாராக இருக்கின்றோம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

அமைதி ஒப்பந்தத்தினை அத்துமீறும் சிங்களப்படைகளின் கொடூரத்தை தட்டிக்கேட்க சர்வதேசமே தயாராக இரு! இன அழிப்பு அடக்குமுறை தொடரும்போது வாழ்வியலுக்காகப் போராடும் நாம் பொறுமை காக்க முடியாது! அரசே! உனது வெறித்தனத்தை நிறுத்தாவிட்டால் காற்றிடைப்பட்ட பஞ்சு போல உம் படைகள் எறியப்படுவர். எம்தலைவன் ஆணைக்காகக் காத்திருக்கிறோம். தலைவன் சுட்டும் திசை நோக்கிப் புயலெனஅடிப்போம்! பகைவனே உன் அடாவடித்தனத்தை நிறுத்து உன் கபடத்தனத்தை கைவிடு! எம் மனங்கள் கொதிக்கின்றன. கண்கள் சிவக்கின்றன. எம்தலைவா நாம் வளர்த்த போராளிகள் படுகொலை செய்யப்படும் போது பொறுமை காப்பதா? வேண்டவே வேண்டாம்!.

நிலங்களை மீட்டு எமது தாயக எல்லைகளை உறுதிப்படுத்தும் புனிதப் போருக்கு அனுமதி தாருங்கள். தமிழீழத் தலைநகரில் புத்தர்சிலை முளைத்தது. வன்பறிப்பாளர் நடவடிக்கை தொடர்கின்றது. இதனை உடைத்தெறியப் புறப்படத் தயாராகி விட்டோம். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சி பேரவையினர் தெரியப்படுத்தியுள்ளனர். (சோ)

# ஜோன்பீற்றர்சனின் இலங்கை வருகை இவ்வாரம் சாத்தியமாகாது?

(கொழும்பு)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அடுத்த சில நாட்களுக்குள் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என செய்திகள் வெளியானபோதும் அதற்கான சாத்தியம் எதுவும் இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகள் தமது போராளிகளின் போக்குவரத்துக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த காலக்கெடு எதிர்வரும் வியாழக்கிழமையுடன் முடிவடைகின்ற நிலையில், இந்த விடயம் தொடர்பாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அல்லது நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் அடுத்த சில நாட்களுக்குள் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால் இவர்கள் எவரும் இந்த வாரத்துக்குள் இலங்கை வருவதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லையெனவும், இத்தகைய விஜயத்துக்கான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# திருகோணமலையில் இருவர் படையினரால் கைது

(திருகோணமலை)

சம்பூரிலிருந்து படகில் சென்ற இருவரை பாதுகாப்பு வலயத்திற்குள் உட்புகுந்தார்கள் எனக் கூறி கடற்படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்துள்ளனர்.

சுமன் மற்றும் ஶ்ரீகரன் ஆகியோரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இரவு 8.30 மணிக்கு துறைமுகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் கடற்படையினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாக திருமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விடுதலைப்...

பாதுகாப்புடனான விடுதலைப்புலிகளின் பிரயாணம் தொடர்பாக சிறிலங்கா சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்ததனபால போர் நிறுத்தக்கண் காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்டிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக சிறிலங்கா அரசிற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இருவார காலக்கெடுவை விதித்து ஒருவாரம் கடந்த நிலையில் சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று இந்த அறிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளார்.

சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கும், போர் நிறுத்தக் கண்கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்டிற்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த அறிக்கையை ஜயந்த தனபால ஹொக்லண்டிடம் கையளித்து விடுதலைப் புலிகளிடம் கையளிக்குமாறு கேட்டுள்ளார்.

தமது போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாவிட்டால் எதிர்வரும் பதினான்காம் திகதிக்குப் பின்னர் போராளிகள் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் இருந்த நடைமுறையின் அடிப்படையில் தமது பயணங்களை படையினர் அனுமதியின்றி மேற்கொள்வர் என தமிழீழ விடுதலைப்புலிகள் எச்சரித்திருந்தமை தெரிந்ததே.

## போராளிகளுக்கு..

றது என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது போக்குவரத்துத் தொடர்பில் வழங்கியுள்ள 14 நாள் காலக்கெடுவுக்குள் உரிய பதிலை அரசாங்கம் வழங்காவிட்டால் தாம் படையினருக்கான விநியோக மார்க்கங்களை முழுமையாக தடை செய்யப் போவதாக சூரியகுமார் எச்சரிக்கை விடுத்தார்.

## தமிழர்மீது...

அமைத்து தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை நடாத்திவரும் இராணுவத்தினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு வேறுயாரும் இந்தச் செயலை செய்யமுடியாது. அரச பயங்கரவாதத்தின் உச்சக்கட்டமாகவே இதனைக் கருதுகின்றோம். இதற்கு அரசு வேறு எந்த பொய்யையும் புனைய முடியாது.

நிராயுதபாணிகளாக நின்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அரசியல் பணி செய்கின்ற விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலை கடும் விசனத்துடன் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இத்தாக்குதல் நடத்தியதன் மூலம் சமாதானம் தூக்கில் இடப்பட்டுள்ளது.கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் இவ்வாறான சம்பவங்களை சிறிலங்காப் படைகளும் அவர்களால் ஊக்குவிக்கப்படும் குழுக்களும் மேற்கொண்டு வருகின்றன. இதனை அரசு வெறுமனே பார்த்துக்கொண்டு நிற்கின்றது. சமாதானத்தின் மீது அரசுக்கு விருப்பமில்லாததையே இது எடுத்துக்காட்டுகிறது.

வடக்கு- கிழக்கு தமிழர் தாயகமாகும். எமது மண்ணில் தமிழ்மக்கள் சுதந்திரமாக சந்தோசமாக வாழ வேண்டும் என்றால் தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து சிங்களப்படைகள் அகற்றப்பட வேண்டும். இது ஒன்றுதான் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கான ஒரே வழியாகும். திருமலைத் தாக்குதல் சம்பவத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசே பொறுப்போற்க வேண்டும் என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## பொதுக்...

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தேசிய ஐக்கிய முன்னணியும், முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடர நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அக்கட்சித்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அது தவிர அம்பாறையிலுள்ள சில முஸ்லிம் மதத்தலைவர்களும் வழக்குத்தொடர தீர்மானித்துள்ளனர். அடுத்த இருவாரங்களினுள் இந்த வழக்குத்தாக்கல் செய்யப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## ஐ.சி.ஆர்.சி...

திருமலை தலைமை அதிகாரியாக ஜுலை 13ஆம் திகதி பதவியேற்கவிருக்கும் ரூட்கிராம் வாகன அணிக்குத்தலைமை வகித்துச் சென்றார். (25)

## யாழ்.இலும்...

லாம் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

இதனால் யாழ். குடாநாடெங்கும் சோகமயமாகக் காட்சி தந்தது.

இதேவேளை திருகோணமலையில் துக்கநாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதற்கான அழைப்பை திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை விடுத்திருந்தது. அதேநேரம் இன்று திருகோணமலையில் பூரண கதவடைப்பு கடைப் பிடிக்கப்படுகின்றது. (25,33)

## போராளிகள்...

கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலில் இரு போராளிகள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

அரசியல்துறைப் பொறுப்பாளர் எழுதியுள்ள இக் கடிதத்தில் நேற்றுக் காலை(10.07.2005) 10.45 மணியளவில் திருமலை உப்புவெளிப் பிரதேசத்தில் எமது போராளிகள் தங்கியிருந்த இடத்தின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. டபிள்யு.பி.2049 என்ற இலக்கத்தைக் கொண்ட வெள்ளை நிறமுடைய ஹைஏஸ் வாகனத்தில் வந்த ஏழிற்கும் மேற்பட்ட ஆயுதந்தரித்த நபர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தை நோக்கி கைக்குண்டொன்றை வீசியதுடன், எமது போராளிகளையும், அவர்களுடனிருந்த பொதுமக்களையும் நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தின்போது முக்கிய போராளி டிக்கான் உட்பட இரண்டு போராளிகளும் இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளதுடன் ஒருவர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் இப்போராளிகளை எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக எமது போராளிகள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்ட பின்னர் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்காணிப்புக் குழுவினருக்கு முறையிட்டிருந்தமை தெரிந்ததே.

வழமையான கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் அரச ஆயுதப் படையினர் அவ்விடத்தை விட்டு அகன்று சென்ற சிறிது நேரத்தின் பின்னர்தான் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. தாக்குதலை நடாத்திய குறிப்பிட்ட வாகனம் சம்பவ இடத்திற்கு அருகிலிருந்த இராணுவச் சாவடியில் தங்குதடையின்றிப் பயணிப்பதற்கு இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் நடாத்தப்பட்ட முறை மற்றும் சம்பவ இடம் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது இராணுவத்திற்குத் தெரிந்திருக்காமல் இச்சம்பவம் இடம்பெற வாய்ப்பேதுமில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் அவர்களுடனிணைந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்களுமே இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளன. போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முற்றிலும் முரணாக, அதனை மீறும் வகையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த யூலை 08-2005 அன்று, அம்பாறை மாவட்டத்தில் அரசியல் பணிபுரிந்து வந்த வெற்றிக்குமரன் என்ற போராளியை இராணுவப் புலனாய்வாளர்கள் கடத்திக் கொலை செய்ய முற்பட்டவேளை பொதுமக்கள் திரண்டதையடுத்து அப்போராளி அவர்களின் பிடியில் இருந்து தப்பிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, அண்மைய நாட்களாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபட்டுவரும் எமது போராளிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. தற்போதுள்ள குழப்பமான சூழ்நிலையில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறுவது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத்தன்மைக்கே பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதோடு தமிழ் மக்களின் மத்தியில் அச்சமும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது.

எமது போராளிகளும் மக்களும் தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொல்லப்படுவதையும், காயப்படுத்தப்படுவதையும், அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவதையும் நாமோ எமது மக்களோ தொடர்ந்தும் பார்த்துக்கொண்டு பொறுமைகாப்பது சாத்தியமற்றது. போர் நிறுத்த சூழலைக் குலைத்து, போர் நிறுத்த உடன்பாட்டை முடித்துக்கொண்டு மீண்டும் ஓர் போர்ச்சூழலை எமது தேசத்தின் மீது திணிப்பதற்கான முழுமையான முயற்சிகளையே இலங்கை அரசும் படைத்தரப்பும் எடுக்க முயல்கின்றதோ எனத் தோன்றுகிறது. ஏனெனில், கடந்த காலங்களில் பலமுறை நாம் இதுபோன்ற நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டியிருந்தும் எச்சரித்திருந்தும், அவை உதாசீனப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் எம்மீதும், எமது மக்கள் மீதும் கொலைகளைக் கட்டவிழ்த்து விட்டு ஓர் நிழல் யுத்தத்தை நடாத்திவருகிறது. இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு, இக்கட்டத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீர்க்கமானதும், உறுதியானதுமான முடிவுகளை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெகா
கணினி கற்கைநெறிகளுக்கான
புலமைப்பரிசில் பரீட்சை

10-07-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
•யாழ்ப்பாணம் •சாவகச்சேரி
•சுன்னாகம் •கிளிநொச்சி •நெல்லியடி

## கருத்துப்படங்கள்

வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப் படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
பிரதம ஆசிரியர்,
ஈழநாதம், கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.